மன்றம்

இரா. நெடுஞ்செழியன், எம். ஏ.

மலர் 4 | 1 - 10 - 55 | இதழ் 1

★

நால் நூற்கும் பொறி கண்ட

ரிச்சர்டு ஆர்க்ரைட்

★



ஐயப்பாட்டிற்கு ஆளான நிலைமை!

1946-ஆம் ஆண்டிலோ அல்லது 1947-ஆம் ஆண்டிலோ ஒருமுறை அறிஞர் அண்ணா அவர்கள் பொதுக்கூட்டம் ஒன்றில் கலந்துகொள்ளத் திருச்சிக்குப் போகவேண்டிய இன்றியமையாமை ஏற்பட்டது. புகை வண்டியில் ஏற எழும்பூர் புகைவண்டி நிலையத்திற்குச் சென்றார்கள்.

அன்றே திருச்சிக்குப் புறப்படத் திட்டமிட்டு, முன்கூட்டியே முதல் வகுப்பில் தங்களுக்கு இடங்கள் ஒதுக்கிவைத்துக்கொண்டிருந்த அண்ணாவின் நெருங்கிய நண்பர்கள் சிலர், எதிர்பாராத விதமாகத் தங்கள் பயணத்தை நிறுத்திக்கொள்ளும்படியான நிலைமை ஏற்பட்டது, அவர்கள் அறிஞர் அண்ணா அவர்களைக் கண்டதும் முதல்வகுப்பு டிக்கட்டுகளை அண்ணாவிடம் கொடுத்துவிட்டு, அவற்றைப் பயன்படுத்திக்கொள்ளும்படியாகச் சொல்லிவிட்டுச் சென்றுவிட்டார்கள்.

அண்ணா அவர்கள் பயணத் துணையாக அழைத்துச் சென்றிருந்த காஞ்சித் தோழர் சி. வி. இராசகோபால் அவர்களோடு, வேறு யாரையேனும் நண்பர்களை அழைத்துக்கொள்ளலாம் என்று கருதி புகைவண்டி நிலையத்தில் வேறு யாரேனும் இருக்கிறார்களா என்று பார்த்தபொழுது, அண்மையில் காலஞ்சென்ற தோழர் எம். எசு. முகைதீன் அவர்கள் திருச்சிக்குப் போக வந்தார். அண்ணா அவர்கள் அவரையும் முதல் வகுப்புக்கு அழைத்துக்கொண்டார்கள். தோழர் முகைதீன் அவர்கள் பழைய இரும்பு வியாபாரியாக இருந்ததால், துருப்பிடித்த ஒரு தகரப் பெட்டியைக் கையில் வைத்திருந்தார், அத்துடன் அவர் முதல் வகுப்பு வண்டியில் ஏறி உட்கார்ந்துகொண்டார்.

படாடோபமற்ற தோற்றத்தில் அறிஞர் அண்ணா, அலங்கோல மான தோற்றத்தில் தோழர் சி. வி. இராசகோபால், (அவரது தோற்றத்தைப் பற்றித்தான் எல்லோர்க்கும் தெரியுமே!) அழுக்கடைந்த உடையோடு, தகரப்பெட்டியுடன் தோழர் முகைதீன்! ஆகிய மூவரும் முதல் வகுப்பு வண்டியில் உட்கார்ந்திருந்ததைப் பார்த்த டிக்கட்டுப் பார்வையிடுவோர் அனைவர்க்கும் தனித்தனியாக ஐயப்பாடு ஏற்பட்டது. ஐயப்பட்ட ஒவ்வொருவரும் அறிஞர் அண்ணா அவர்கள் உட்கார்ந்திருந்த வண்டியில் ஏறி டிக்கட்டு கேட்கவும், அண்ணா டிக்கட்டுகளைக் காட்டவும், அவர்கள் பார்த்துவிட்டு இறங்கிப்போகவும் ஆன நிகழ்ச்சிகள் வண்டி புறப்படும் வரையில் தொடர்ந்து நடந்துகொண்டேயிருந்தனவாம்.

புகைவண்டி செங்கற்பட்டுச் சந்திப்பில் போய் நின்றபோது, தோழர் முகைதீன் அவர்கள் தாம் முதல் வகுப்பில் உட்கார்ந்திருக்கிறோம் என்பதையும் மறந்துவிட்டு, வழக்கம்போல், புகைவண்டி நிலையத்தில் ஒரு அணாத் தேநீர் விற்பவனை விளித்துத் தேநீர் கேட்டாராம்: "முதல் வகுப்பில் உட்கார்ந்துகொண்டு ஒருவர் ஒரு அணாத் தேநீரை விளித்துக் கூப்பிடுகிறாரே, இவர் டிக்கட்டு வாங்கியிருப்பாரோ!" என்று ஐயப்பட்டுக்கொண்டு ஒரு பார்வையிடுவோர் வண்டியில் ஏறி, ஒருவரிடமும் டிக்கட்டு இருக்காது என்ற எண்ணத்துடன் மூவரையும் பார்த்து டிக்கட்டு கேட்டாராம். உடனே அண்ணா அவர்கள் அவரிடம் டிக்கட்டுகளை நீட்டினாராம். அவர் பார்வையிட்டு விட்டுப் பேசாமல் இறங்கிவிட்டாராம்.

டிக்கட்டு வாங்கவில்லையோ என்ற ஐயப்பாட்டிற்கு ஆளாகவேண்டிய நிலைமை அறிஞர் அண்ணா அவர்களுக்குத் திருச்சி போய்ச் சேரும் வரையில் ஏற்பட்டதாம்!

மன்றம்

1 - 10 - 55 சனிக்கிழமை

தாழ்ந்த திராவிடம்

வடநாடு வளருகிறது—தென்னாடு தேய்கிறது என்ற உண்மையை, நாம் வாய்ப்பு ஏற்படும்போதெல்லாம் நாட்டு மக்களுக்குச் சுட்டிக்காட்டி வருகிறோம்.

ஓங்கி உயர்ந்து வாழ்ந்த திராவிடம் இன்று வீழ்ந்து தாழ்ந்து சீரழிந்துபோய்க்கொண்டிருக்கிறது என்பதற்கு எண்ணிறந்த எடுத்துக்காட்டுக்களை எடுத்துக்கூறிவருகிறோம்.

இந்த நாட்களில் ஒருநாடு செல்வச்செழிப்பில் சிறந்தோங்கவேண்டுமானால், அது பொறித்தொழில் வளர்ச்சியில் மிக்கு ஓங்க வேண்டும் என்பது கண்கூடு. பொறித்தொழில் வளர்ச்சி பொருள் உற்பத்தி வளர்ச்சிக்கும், பொருள் உற்பத்தி வளர்ச்சி வாணிக வளர்ச்சிக்கும், வாணிக வளர்ச்சி செல்வ வளர்ச்சிக்கும் காரணமாகின்றன. இது வடநாட்டைப் பொறுத்தவரையில் உண்மையான காட்சியாக இருந்துவருகிறது. பொறித்தொழில் ஏற்கனவே உயர்ந்திருக்கும் வடநாட்டை மேலும் மேலும் வளர்க்கவே இந்தியப் பேரரசு திட்டமிட்டுவருகிறது.

ஒரு நாட்டில் ஒருபகுதி பொறித்தொழிலில் வளர்க்கப்பட்டு மற்றொரு பகுதி உழவுத்தொழிலிலேயே வைக்கப்பட்டிருக்குமேயானால், பொறித்தொழிலில் வளர்ந்த பகுதி உழவுத்தொழிலிலேயே இருக்கும் பகுதியை அடக்கி ஆண்டு அடிமைகொள்ளும் என்பதும் கண்கூடாகும். வடநாட்டிற்குத் தென்னாடு எல்லாவகையிலும் அடிமைபட்டுக்கொண்டு வருவதைக் கொண்டே இந்த உண்மையைத் தெரிந்துகொள்ளலாம்.

உழவுத்தொழிலில் ஈடுபட்டிருப்பவர்கள் நாளுக்குநாள் பொறித்தொழிலுக்கு மாற்றப்பட்டு, உழவுத்தொழிலாளரின் எண்ணிக்கை குறைந்தால்தான், வேலையில்லாத் திண்டாட்டம் நீங்கும், வேலை செய்யும் நாட்களும் மிகவாகும், கூலியும் மிகவாகக் கிடைக்கும். இந்த வகையில் வடநாடு முன்னேறுவதையும், தென்னாடு தேங்கிக்கிடப்பதையும் உண்மை நிலையை ஆராய்வதன் மூலம் நன்கு அறிந்து கொள்ளலாம்.

வடநாடு எந்த அளவுக்கு வளர்ந்திருக்கிறது, தென்னாடு எந்த அளவுக்குத் தேய்ந்திருக்கிறது என்பதை அண்மையில் இந்தியப் பேரரசினர் வெளியிட்டுள்ள புள்ளிவிவரக் கணக்கே பேசும்.

தென்னாட்டில் ஒரு உழவுத்தொழிலாளிக்குச் சராசரி வேலை கிடைக்கும் நாட்கள் 181 நாட்கள். அதே நிலையில் வடநாட்டில் ஒரு உழவுத் தொழிலாளிக்கு வேலை கிடைக்கும் நாட்கள் 292 நாட்கள் ஆகும்.

பொறித்தொழிலில் ஈடுபட்டிருக்கும் தொழிலாளர்களை எடுத்துக்கொண்டால், **தென்னாட்டில் ஒரு தொழிலாளி வேலை கிடைக்காமல் தவிக்கும் நாட்கள் 115 ஆகும்; அதே நிலையில் வடநாட்டில் வேலையில்லாமல் தவிக்கும் நாட்கள் 49 நாட்களே ஆகும்.**

தென்னாட்டின் உழவுத் தொழிலாளிக்குக் குறைந்த அளவு நாட்களே வேலை கிடைப்பதற்குக் காரணம் கூறும்போது, **"தென்னாட்டில் உழவுத் தொழிலாளர்கள் ஏராளமானவர்களாக இருப்பதாலும், அதுவும் குறிப்பாகப் பெண் தொழிலாளர்கள் ஏராளமாக இருப்பதாலும், உழவேண்டிய நிலம் மிகச் சிறிய அளவுள்ளதாக இருப்பதாலும் வேலை செய்யும் நாட்கள் மிகக் குறைந்திருக்கின்றன"** என்று இந்தியப் பேரரசின் அறிக்கை கூறுகிறது,

தென்னாட்டில் பொறித் தொழிலாளரின் எண்ணிக்கை, வடநாட்டுப் பொறித்தொழிலாளரின் எண்ணிக்கையைக் காட்டிலும் மிக மிகக் குறைவாகும். அப்படியிருந்தும் தென்னாட்டுப் பொறித்தொழிலாளிக்குச் சராசரி 115 நாட்கள் வேலை கிடைப்பதில்லை, இதற்கான காரணத்தைக் கூறும்போது **"தென்னாட்டில் போதுமான அளவு பொறித்தொழில் வேலையின்மையே வேலையில்லாத் திண்டாட்டத்திற்குக் காரணம்"** என்று அந்த அறிக்கை கூறுகிறது.

தென்னாட்டில் ஒரு உழவுக் குடும்பத்தின் சராசரி ஆண்டு வருமானம் ரூ. 382; ஆனால் வடநாட்டில் ரூ. 512 ஆகும்.

தென்னாட்டில் ஒரு உழவுத் தொழிலாளியின் சராசரி ஆண்டு வருமானம் ரூ. 91; ஆனால் வடநாட்டில் ரூ. 117 ஆகும்.

தென்னாட்டில் 100-க்கு 52 உழவர் குடும்பங்கள் கடன்பட்டிருக்கின்றன: ஆனால் வடநாட்டில் 100-க்கு 37 குடும்பங்கள்தாம் கடன்பட்டிருக்கின்றன.

பொறித்தொழிலை எடுத்துக்கொண்டால் தென்னாட்டில் ஒரு தொழிலாளிக்கு ஆண்டு ஒன்றுக்கு ரூ. 300-க்குக் குறைவாகத்தான் கிடைக்கிறது; வடநாட்டில் ரூ. 600-க்குமேல் கிடைக்கிறது.

எனவே தாழ்ந்த திராவிடம் ஓங்கி உயர வேண்டுமானால், **பெருந் தொழிற்சாலைகள் தென்னாட்டில் துவக்கப்பட்டால்தான், தென்னாட்டின் வரிப்பணமும் வளமும் அதற்குப் பயன்படுத்தப்பட்டால்தான், திராவிடநாடு திராவிடர்க்கானால்தான் ஆகும்** என்பதை ஒவ்வொருவரும் மேற்கண்ட புள்ளிவிவரங்களிலிருந்து எளிதில் உணர்ந்துகொள்ளலாம்.

கருத்துக் கதிர்

ஆட்சியின் அலங்கோலம்!

சிலநாட்களுக்குமுன் இந்தியப் பாராளு மன்றத்தில், இந்திய அரசாங்கப் பொதுக் கணக்குத் தணிக்கைக் குழு தனது 1954—55-ம் ஆண்டு அறிக்கையை ஒப்படைத்திருக்கிறது. இந்தியப் பேரரசின் ஊழல் நிர்வாகத் திறமைக்கு ஒரு எடுத்துக்காட்டாக அந்த அறிக்கை அமைந்திருக்கிறது. தாபல்—தந்தி, இரயில்வேத் துறைகளில் காணப்படும் ஊழல்களை விரித்துக் கூறியுள்ளது.

கல்கத்தாவிலுள்ள தபால்-தந்தித் துறையினர் எவ்விதத்திலும் இதுவரை உபயோகப்படுத்தாத இரண்டு கட்டிடங்களுக்காக சென்ற ஏழுவருட காலமாக வாடகைமூலம் கொடுத்த தொகை ரூ. 4,60,000.

ரயில் தளவாடங்களை உற்பத்திசெய்து கொடுக்க சர்க்கார் இரயில்வே இலாக்கா டெல்கோ என்ற தொழிற்சாலையுடன் ஒப்பந்தம் செய்துகொண்டு, அதற்கு வசதிகள் (பொருள் உதவி) அளித்தது. ஆனால், அத்தொழிற்சாலை அவ்வசதிகளை வேறு வகையில் லாபம் திரட்ட செலவிட்டதால், ரயில் தளவாட உற்பத்தியில் காலதாமதம் ஏற்பட்டு உரியகாலத்தில் கிடைக்கவில்லை. அதனால், ரயில் அதிகாரிகள் அவைகளை வேறு இடத்தில் அதிகவிலை கொடுத்து வாங்கியுள்ளனர்.

அமெரிக்காவிலுள்ள சாமான்கள் ஆர்டர் கொடுக்கும் இந்தியப் பிரதிநிதியின் பொறுப்பற்ற தன்மையினால் அமெரிக்காவிலிருந்து தருவித்த ரயில் தண்டவாளங்களுக்காகச் செலுத்திய தொகை முழுவதும் நஷ்டமாகும். அமெரிக்காவிலிருந்து உபயோகமில்லாத தண்டவாளங்கள் இங்கு வந்து சேர்ந்திருக்கின்றன.

வெளிநாடுகளிலிருந்து புட்டிப்பால் வாங்கியதில் இந்திய சர்க்காருக்கு ஒருலட்சம் ரூபாய் நஷ்டம் ஏற்பட்டிருக்கிறது.

வெளிநாட்டில் இந்தியத் தூதராலயங்களில் பணியாற்றும் இந்திய அதிகாரிகள் பொய் சர்டிபிகேட் காட்டி 'அலவன்சு' வாங்கும் பழக்கத்தை மேற்கொள்ளுகின்றனர்.

இரண்டு பவுன் முதலோடு ஆரம்பிக்கப்பட்ட ஒரு உதவாக்கரை கம்பெனியோடு இந்திய சர்க்கார் உடன்படிக்கை செய்துகொண்டு, அந்தக் கம்பெனி டைரக்டர் ஒருவரின் கையெழுத்தின்பேரில் கண்டிக்கத்தக்க வகையில் 17000 பவுன்களை வழங்கியிருக்கின்றது. மேலும் பணம் வாங்கிய நாளில்தான் அவரும் டைரக்டராகியிருக்கிறார்.

இதுவல்லாமல் ஆட்சியின் நிர்வாகத் திறமையின்மையை மதிப்பீட்டுக்குழு ஒப்படைத்த அறிக்கை எடுத்துக்காட்டியுள்ளது. இந்துஸ்தான் இயந்திரசாதன உற்பத்திச்சாலை அமைவதற்கு இதுவரை ஐந்துகோடி ரூபாய் வரை செலவழித்தும் உருவான பலன் ஏதும் கிடையாதாம். இந்தத் தாமதத்தினால் பெரும் பொருள் நஷ்டமடைந்திருக்கிறதென்றும் மதிப்பீட்டுக்குழுவின் அறிக்கை கூறியிருக்கிறது,

இப்படி ஆண்டுதோறும் பொதுக் கணக்குத் தணிக்கைக்குழுவும் பிறவும் தருகிற ஊழல் பட்டியல் நீண்டு கொண்டே போகின்றது. அணைக்கட்டு ஊழல், லஞ்ச ஊழல், உரப்பேர ஊழல், தபால்—தந்தி, இரயில்வே இலாக்கா ஊழல், தொழிற்சாலை முதலுதவிக் கார்ப்பரேஷன் ஊழல் என்று ஊழல்கள் புற்றீசலாகக் கிளம்பிய வண்ணம் இருக்கின்றன.

முதல் ஐந்தாண்டுத் திட்டம், இரண்டாவது ஐந்தாண்டுத்திட்டம் என்று பல ஆயிரக் கோடிக்கணக்கான ரூபாய்களுக்கு திட்டங்கள் போட்டுவிட்டு நாட்டுமக்களிடம், "இதோ பாரீர்! பார்புகழும் திட்டங்கள்! எங்களால் தயாரிக்கப்பட்டது! பத்து ஆண்டுகள்! பின் பாருங்கள் பறந்துபோகும் வறுமையும் வாட்டமும்! ஆலைகள் ஏராளம்! வேலையிலாதோர் இரார்! ஒரு சோசியலிச 'மாதிரி'ச் சமுதாயத்தையே உருவாக்கப்போகிறோம்" என்று, உலகஞ்சுற்றிப் பேறுபெறும் நேரு பண்டிதரிலிருந்து காங்கிரசு ஆட்சியின் கடைசி எடுபிடி வரை செல்லுமிடங்களிலெல்லாம் வாய்வீரம் பேசுவது, வரப்போகும் தேர்தலுக்குப் பிரசாரமாக இருக்கிறதேயொழிய, நடைமுறையில் அவர்களது நிர்வாகம் ஊழல் அற்றதாக விளங்கக் காணோம். ஐந்தாண்டுத் திட்டங்களின்கீழ் ஆங்காங்கே செலவழிக்கப்படும் பொதுப்பணம் விழலுக்கிறைக்கும் நீராகிவிடுகிறது.

பொதுப்பணம் விரயமாக்கப்படுகிறது அங்கே! இங்கே நமக்கு வாழ வகையில்லை. என்று தீருமோ இந்நிலை!

இந்திமொழி வெறி

தென்னாட்டில் இந்திமொழிக்கு ஆதிக்கம் ஏற்படவேண்டும் என்று கனவுகாணும் வட நாட்டினர் கொண்டிருக்கும் இந்திமொழி வெறித்தன்மைக்கு எடுத்துக்காட்டாக ஒரு சம்பவம் அண்மையில் டில்லி மக்கள் சபையில் நிகழ்ந்திருக்கிறது.

மொழிக் கமிஷன் மான்யர் கோரிக்கை மக்கள் சபையில் விவாதத்திற்கு வந்தபோது, இந்திய அரசியலார் இந்திமொழி பற்றிக் கொண்டிருக்கும் கொள்கைகளையும், திட்டங்களையும் கண்டிக்கும் வகையில் தோழர்கள் குருபாதசாமி, வல்லத்தரசு போன்றோர் பேசியிருக்கிறார்கள்.

அவர்களுடைய பேச்சு மொழிவெறிகொண்டிருக்கும் சிலருக்கு ஆத்திரத்தை உண்டு பண்ணி இடையிடையே கூச்சலிடச்செய்திருக்கிறது.

“பதினைந்து ஆண்டுகளில் இந்தியை அரசாங்கமொழியாக்கவேண்டும் என்ற அரசியல் சட்டத்தை நான் ஏற்றுக்கொள்ளமுடியாது” என்று தோழர் குருபாதசாமி கூறியபோது, அதைக் கேட்கப்பொறாத சில காங்கிரசு உறுப்பினர்கள் கூச்சலிட்டார்களாம்.

அதைப் பொருட்படுத்தாது தோழர் குருபாதசாமி மேலும் தொடர்ந்து பேசுகையில், “இந்தி மொழியைக் கற்றுக்கொள்வதற்கு எங்களுக்கு ஐம்பது ஆண்டுகள் தேவைப்படலாம்” என்று குறிப்பிட்டபோது, வெறி உணர்ச்சிகொண்ட சிலர் குறுக்கிட்டு, “ஐந்நூறு ஆண்டுகள் வேண்டுமா? அதுவரை நீங்கள் உயிருடன் இருப்பீர்களா?” என்று கேலியாகக் கேட்டார்களாம்.

உடனே தோழர் குருபாதசாமி “இதோ! இந்திமொழி வெறிக்கு ஒரு எடுத்துக்காட்டு!” என்று கூறி இந்தி வலுக்கட்டாயமாகத் தென்னாட்டவர்மீது திணிக்கப்பட்டால் அந்தத் திட்டம் வீணாகிவிடும் என்று எச்சரித்தார்.

தோழர் குருபாதசாமி இந்திமொழியைத் தாழ்த்தியோ மற்ற எந்த மொழியையும் உயர்த்தியோ பேசிவிடவில்லை; இந்தி இந்திய அரசாங்க மொழியாவதை அவர் கண்டிக்கவில்லை; என்றாலும் இந்தி வெறியர்களால் கேலி செய்யப்பட்டிருக்கிறார்.

இந்தி பொதுமொழியாக ஆக்கப்படும் கால அளவை மாற்றி சகல மொழியினரும் கற்றுக்கொள்வதற்கு ஏற்றவாறு வசதிகள் செய்து தரவேண்டும்என்று குருபாதசாமி பேசியதைக் கேட்கப் பொறுக்கவில்லை என்றால் எந்த அளவுக்கு இந்திமொழி வெறி அவர்களிடத்து ஊறி வழிகின்றது என்பதைத் தெளிவாகத் தெரிந்துகொள்ளலாம்.

இந்த விவாதத்தில் பதிலளிக்க முன்வந்த பண்டித பந்த் புதிதாக எதையும் கூறவில்லை. பழைய பல்லவியையே பாடியிருக்கிறார். பதினைந்து ஆண்டுகளில் இந்தியை கற்றுக்கொள்ளும் வாய்ப்புகள் ஏற்பட்டுவிடுமென்றும் கால அளவு மாற்றம் தேவைப்படாது என்றும் கூறியுள்ளார்.

பொதுமொழிக் கால அளவை மாற்றுவதில் வடவர்களுக்கு விருப்பமில்லை என்பது மட்டும் புரிகின்றது. ஏனெனில் கால அளவை மாற்றினால் அந்த இடைப்பட்ட ஆண்டுகளுக்குள் மாநில மொழிகள் பலம்பெற்று, இந்தியின் அவசியம் குறைந்துவிடும்படியான சூழ்நிலைகள் ஏற்பட்டுவிடுமோ என்று ஐயுறுகின்றனர்.

டில்லியிலே இருந்துகொண்டு தோழர் குருபாதசாமியை கேலிசெய்யும் காங்கிரசுக்காரர்கள் தெற்கே வரும்போது பெட்டிப் பாம்பாக அடங்கிவிடுகின்றனர். காரணம் இங்கே இந்தி மொழியை பொதுமொழியாகவே ஏற்றுக்கொள்ள மறுப்பதால்தான். இந்தி கட்டாயமாக்கப்படவில்லையென்று மந்திரிமார்கள் இங்கே எவ்வளவுதான்சொல்லி ஆதரவுதேட முயற்சித்தாலும் இந்தி எதிர்ப்புக் கிளர்ச்சியை அடக்கிவிடமுடியாது என்பதுமட்டும் உறுதி.

வடநாட்டுக்குத் தென்னாட்டுப் பணம்

தென்னாட்டுப் பணத்தில் வடநாடு பல வகைகளிலும் வாழ்ந்துவருகிறது என்பதை நாம் அடிக்கடிச் சுட்டிக்காட்டி வருகிறோம்.

வடநாட்டில் வெள்ளத்தடுப்புக்கு என்று ஆண்டுதோறும் கோடிக்கணக்கான ரூபாய்

களை இந்திய அரசாங்கம் செலவிட்டுவருகிறது. அதில் தென்னாட்டு வரிப்பணமும் கலந்துகிடக்கிறது. அடுத்த ஐந்தாண்டு திட்டத்தில் வடநாட்டில் வெள்ளத்தடுப்புக்கு என்று சுமார் ரூ. 100 கோடி ஒதுக்கப்படக் கூடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. தென்னாட்டைப் பொறுத்து இது தேவையற்ற செலவுதானே! இன்றைய இந்திய யூனியன் ஆட்சியின் கீழ்த் தென்னாட்டுப் பணம் இப்படியெல்லாம் வடநாட்டுக்குப் பயன்படுத்தப்படுகிறது! இவற்றையெல்லாம் காங்கிரசுக்காரர்கள் ஏனோ உணர மறுக்கிறார்கள்—மறக்கிறார்கள்?

பிச்சைக்காரர் ஒழிப்பு

பிச்சை எடுத்துப் பழகிப்போனவர்களுக்கு வேலைகள் செய்ய உடம்பு வளைவதில்லையாகையால் அவர்களை எந்த வேலைகளிலும் ஈடுபடுத்துவது சாத்தியமில்லை யென்றும் பொருளாதார அபிவிருத்தி ஏற்பட்டால், பிச்சை எடுப்பது தானாகவே குறைந்துவிடும் என்றும் சென்னை நிதி அமைச்சர் சுப்ரமணியம் பிச்சைக்காரர் ஒழிப்புபற்றி சட்டசபையில் பேச்சு எழுந்தபோது கூறியிருக்கிறார்.

பிச்சைக்காரர்களை ஒழிக்கும் திட்டம் இப்போது இல்லை என்றுமட்டும் கூறினால் தங்கள் தகுதிக்குக்குறைவுஎன்றுஎண்ணினார்போலும் பிச்சைக்காரர்களின் பழக்கங்களைப் பற்றி ஒரு உளநூல் அறிக்கையும், பிச்சை எடுப்பதை எப்படி ஒழிப்பது என்பதுபற்றி ஒரு பொருளாதார விளக்கத்தையும் அளித்துள்ளார். பொருளாதார அபிவிருத்தியால் பிச்சை எடுப்பது தானாகக் குறைந்துவிடுமாம்.

பட்டினி நோயால் வாடி எழுந்து நடக்கமுடியாத நிலையிலுள்ளவனைப் பார்த்து நன்றாகச் சாப்பிட ஆரம்பித்தால் சீக்கிரம் நடமாடும் நிலையை அடைவாய் என்று கூறுவதுபோலிருக்கிறது, நிதி அமைச்சரின் பேச்சு. மேலும் பிச்சைக்காரர்களுக்கு பிச்சை எடுத்துப் பழகியதால் வேலைகள் செய்யமுடியாதாம். உடம்பு வளையாதாம். பொருளாதார அபிவிருத்தியின்போது திடீரென்று அவர்களது உடம்புகள் நிமிர்ந்து, அவர்கள் வேலைசெய்ய ஆரம்பித்துவிடுவார்கள்போலிருக்கிறது! பிச்சைக்காரர்களைத் திருத்தி அவர்களை வேலைகளில் ஈடுபடுத்தத் தங்களுக்குத் திறமையும் வசதியும் இல்லை என்பதை இப்படி நிதி அமைச்சர் தெளிவாகக் கூறுகிறார்!

ஆவடி மாநாட்டில் சென்னை சர்க்காரின் செலவு

சென்ற ஆண்டு ஆவடியில் நடந்த மாநாட்டால் சென்னை சர்க்காருக்கு ரூ. 4,80000 செலவாம். சத்தியமூர்த்தி நகர் அமைப்பிற்கு செலவிடப்பட்டதாம். அதில் ரூ. 3,40,000 கார்ப்பரேஷனுக்கு கொடுக்கப்பட்ட மான்யப் பங்காம்.

காங்கிரசுக் கட்சி ஆளும் கட்சியாக இருப்பதால் பெற்ற வசதிகளில் இது ஒன்றாகும். அப்பொழுது சொன்னது ஆவடி மாநாடால் ஆகும் செலவை காங்கிரசு மகாசபையே ஏற்கும் என்பதாகும். ஆனால் இப்போது சென்னை சர்க்கார் செலவு கணக்கைக் காட்டுகிறது.

இவ்வித சலுகைகள் மற்ற அரசியல் கட்சிகளுக்குக் கிடைக்குமா என்று கேட்கப்பட்ட கேள்விக்குப் பதிலளித்த நிதிமந்திரியார், காங்கிரசுக் கட்சிக்குத்தான் பெருங்கூட்டம் கூடுகிறதென்றும் மற்ற கட்சிகளுக்கு அப்படிக் கூடுமானால் அதைப்பற்றி ஆலோசிக்கலாம் என்றும் தெரிவித்திருக்கிறார்.

இதுவரை எந்த பிற அரசியல் கட்சிகளும் எவ்வித வசதிகளையும் பெற்றதில்லை, 'போலீஸ் உதவி'யைத் தவிர. 1952-ல் தி. மு. கழகம் பெரும் மாநாடு கூட்டியபோது இடங்கொடுக்க மறுத்தனர். கடைசியாக எஸ். ஐ. ஏ. ஏ. மைதானத்தில் நடைபெற்றது.

தி. மு. கழகக் கூட்டங்கள் பல வாரந்தோறும் சென்னைமாநகரில் நடைபெற்றவண்ணம் இருக்கின்றது. கூட்டங்களுக்கு வரும் பெருவாரியான மக்கள் இடவசதியின்மையால் அவதியுறுகின்றனர். காங்கிரசுக் கட்சியினருக்கு கூட்டமென்றால் ராஜாஜி ஹாலில் நடைபெறும், பண்டிதர் வந்தால் ஐலண்ட் மைதானத்தில் நடைபெறும். காங்கிரசுக் கட்சி மாநாட்டிற்கு நாலேமுக்கால் லட்சம் செலவழித்த சென்னை சர்க்கார், இதர கட்சிகள் சென்னை நகரில் பொதுக்கூட்டங்கள் நடத்த வசதியான பொதுவிடங்களை அமைத்துத்தர முன்வருவார்களா?

அவர்கள் பெறும் வசதி அதற்கு இது மோசமில்லை !

“ரயில் நிலையங்களில் பிரயாணிகளின் காத்திருக்கும் அலுப்பைக் குறைக்க சினிமாப்படங்கள் காட்ட ஏற்பாடு செய்யப்படுகிறது” என்று அண்மையில் சர்க்கார் செய்தியொன்று வெளிவந்திருக்கின்றது.

பொதுப்பணம் பாழாகும் பலவகை வழிகளில் இந்த ரயில் நிலையங்களில் சினிமாப் படங்கள் காட்டும் திட்டமும் ஒன்றாகும். ரயில் நிலையங்களில் பிரயாணிகள் வண்டிகளுக்காகக் காத்துக்கொண்டிருப்பதால் ஏற்படும் அலுப்பைக் குறைக்கவே இந்தத் திட்டமாம். அலுப்பைக் குறைக்க காத்துக்கொண்டிருக்கும் நிலைமையை அகற்ற வழிகாணவேண்டுமே ஒழிய காத்துக்கொண்டிருக்கும் நேரத்தைப் படங்கள் காட்டுவதன் மூலம் அதிகப்படுத்திவிடக்கூடாது.

பொதுத்தேர்தல் நெருங்கிவருகிறதாகையால், மற்ற கட்சிகளுக்கு கிடைக்க இயலாத தேர்தல் பிரசார வசதிகள் இத்திட்டத்தினால் காங்கிரசுக்கட்சிக்குக் கிடைக்கலாம். முன்பு செய்திப்படங்கள் சினிமா கொட்டகையில் காட்டப்படுவது கட்டாயப்படுத்தப்பட்டிருந்தது. இப்பொழுது அது சட்டத்தின்மூலம் உடைக்கப்பட்டுவிட்டது. ஆகையால் இந்தத் திட்டத்தை காங்கிரசு சர்க்கார் மேற்கொள்ளுகின்றதுபோலும் ! இப்பொழுது வெளியாகும் செய்திப்படங்களிலெல்லாம் நேரு பண்டிதர் தான் ‘பிரதான நடிகரா’கக் காட்சியளிக்கின்றார். மற்ற மந்திரிகளும் நடிக்கின்றனர்—அதில்கூட தென்னாட்டு ‘நடிகர்’களுக்கு எப்போதாவதுதான் இடம் கிடைக்கின்றது.

பொதுப்பணச் செலவில் துண்டுப்படங்களை சுட்டுத்தள்ளும் சர்க்கார் செய்தி இலாகாவின் ‘காமிரா’க்கள் பிரதமரையும் மந்திரிகளையும் தொடர்ந்து சுற்றிக்கொண்டிருக்கிறதே தவிர, அறிவு வளர்ச்சிக்காக, சமூக சீர்திருத்தத்திற்காக, பெருமளவில் செய்திப்படங்களைத் தயாரிக்கப் பயன்படுத்தப்படுவதில்லை. ஆனால் சீர்திருத்தக்காரர்களின் கருத்துக்களைக்கொண்டு தனிப்பட்டவர்கள் தங்கள் பணச்செலவில் தயாரிக்கும் படங்களில் கத்தரிக்கோல் வைப்பதற்கு மட்டும் தயங்குவதில்லை இந்த சர்க்கார் !

ரயில் நிலையங்களில் சினிமா காட்டும் திட்டம் காங்கிரசு கட்சி பெறும் ஒரு பெரும் வசதியாயேகும்.

⁂ ⁂ ⁂

வன்னியகுல க்ஷத்திரிய மக்களுக்கு அளிக்கப்படும் சம்பள உதவி பற்றிய சென்னை சர்க்கார் உத்தரவு ஒன்றில் ஏற்பட்ட சிறு வார்த்தைப் பிழையின் காரணமாக இரண்டுலட்சம் ரூபாய் அதிகச் செலவாகிவிட்டதாம். ‘குற்றப் பரம்பரையினரை சேர்ந்த’ என்ற வார்த்தை விடுபட்டதால், அந்த மரபினரல்லாத வன்னியர்கள் பணம் உதவிபெற்றுவிட்டார்களாம். அதைத் திரும்ப வசூலிக்க சர்க்காருக்கு எண்ணமில்லை என்று நிதியமைச்சர் சட்டசபையில் தெரிவித்துள்ளார்.

இந்திய சர்க்காரின் திறமையின்மைக்கு சென்னை சர்க்காரின் திறமையின்மை பரவாயில்லை !

அங்கே பொதுப்பணம் குறிப்பிட்ட இடத்திலோ அல்லது தனிப்பட்ட கம்பெனிகளுக்கோ விரயமாக்கப்பட்டிருக்கிறது. இங்கே அதிகச் செலவுசெய்யப்பட்ட பொதுப்பணம் மாநிலம் முழுவதும் பரவியுள்ள ஒருபகுதி மக்களிடம் சேர்ந்திருக்கிறதல்லவா !

⁂ ⁂ ⁂

பிரியாணி பிராணிகளின் கலியாணக்கோலம் !

என்ன புண்ணியம் செய்ததோ, எந்தக் கோவிலின் முன் கூவியதோ தெரியவில்லை, ஒரு சேவலுக்கும் கோழிக்கும் ‘பாபவிமோசனம்’ கிடைத்திருக்கிறது—பிரியாணியாக மாறவில்லை தற்போதைக்கு!

ஜபல்பூருக்கு அருகிலுள்ள நயின்பூர் என்ற ரயில் நிலையத்தில் ஒரு சேவலுக்கும் ஒரு கோழிக்கும் ‘சம்பிரதாய’ முறையில் திருமணம் நடைபெற்றதாம் சென்ற 19-ம் நாளன்று. பெண் கொடுத்தவர் ஒரு ஆபீஸ் ஊழியராம், கொண்டவர் ரயில்நிலைய சிற்றுண்டி விடுதியின் சொந்தக்காரராம். இந்தத் திருமண விழாவைச் சுமார் இருபதுபேர்வரை முன்னின்று நடத்திவைத்தார்களாம். ‘மனைவி’ ‘கணவனிடம்’ வாழ அனுப்பப்பட்டாளாம்.

சிற்றுண்டி விடுதி உரிமையாளரின் அரவணைப்பில் புதுமணத் தம்பதிகள் இருப்பதால், அவர்களின் வாழ்வு ‘நீத்தியகண்டம் பூரண ஆயுசுதான்!’ சிற்றுண்டி விடுதிக்காரர், ஒரு பேருண்டியை எதிர்நோக்கி, மக்களின் உள்ளத்திலே பதிந்துகிடக்கும் மூடநம்பிக்கையை சுயநலத்திற்குப் பயன்படுத்தி இந்தத் திருமணத்தை நடத்திவைத்தாரோ என்னவோ !

எதிர்பாரா பெருஞ்செல்வம்

பெருஞ்செல்வம் திரட்டவேண்டும் என்ற எண்ணங்கொண்டு பலர் பல துறைகளில் இறங்குவதுண்டு. இடர்கள் பல ஏற்று, விடா முயற்சியுடன் ஓயாது உழைத்தாலும், ஆண்டுகள் பல கழிந்த பின்னர்தான் செல்வம் குவியும் வழிபிறக்கும். அதுவும் சிலருடைய முயற்சியில்தான அமையும். ஆனால் செல்வம் திரட்டவேண்டும் என்ற எண்ணமே கொள்ளாத சிலருக்கு சில எதிர்பாரா நிகழ்ச்சிகள் மூலம் பெருஞ்செல்வம் சேர வழி ஏற்பட்டுவிடுவதுண்டு.

எதிர்பாரா நிகழ்ச்சிகள் என்று கூறுவது, மந்திரம் என்று கூறித் தந்திரம் செய்வதையோ அல்லது பானை பானையாகப் புதையல்கள் எடுப்பதையோ குறிப்பதாகாது. மனித வாழ்க்கை வசதிகள் பெருகும்வண்ணம் புதிய கருவிகள் கண்டுபிடித்தலையே நிகழ்ச்சி என்பது இங்கு குறிக்கும்.

எதிர்பாராத நிகழ்ச்சிகளின் வாயிலாகப் பல புதியன கண்டுபிடிக்கப்பட்டு அதன்மூலம் சிறுசிறு கருவிகள் செய்யப்பட்டு, அவை, கண்டுபிடித்தவருக்கோ அல்லது உற்பத்தியாளருக்கோ, பல சமயங்களில் பெருஞ்செல்வத்தை அளிக்கக்கூடியனவாக அமைந்துவிடுகின்றன.

ஊக்கு (Safty Pin), அழிக்கும் ரப்பர்கொண்ட பென்சில், ரப்பராலான அடியைக்கொண்ட செருப்பு, 'பேப்பர் கிளிப்', டின் மூடி இன்னும் இவைபோன்ற பல சிறு கருவிகளின் கண்டுபிடிப்புகளுக்கும், அவைகளைக் கண்டுபிடித்தவர்களுக்கும் அறிவியல் வரலாற்று ஏட்டில் அதிமுக்கியத்துவமான இடம் கொடுக்கப்படாவிட்டாலும், அச்சிறு கருவிகளின் மூலம் பெருஞ்செல்வம் சேர்க்கப்பட்டது. அனேகமாக இக்கருவிகளெல்லாம் எதிர்பாரா நிகழ்ச்சிகளில் இமைப்பொழுது ஆராய்ச்சிகளின் பயனாகக் கண்டுபிடிக்கப்பட்டவைகளாகும்.

அமெரிக்க நாட்டில் பிலடெல்பியா நகரைச் சேர்ந்த ஹைமன் லிப்மன் (Hyman Lipman) என்பவரைப்போல் ஒரே சமயத்தில் பெருஞ்செல்வம் பெற்றவர் வேறெவரும் இல்லை யென்றே சொல்லலாம். பென்சிலினால் காகிதங்களில் எழுதிக்கொண்டிருக்கும்போது ஏற்படும் தவறுகளை அழிப்பதற்கு அழிக்கும் ரப்பரைத் தேடிக்கொண்டிருப்பதைவிட அதை பென்சிலின் மறுமுனையில் பொருத்திக்கொண்டால் என்ன என்று எண்ணி அதற்கு ஒரு வழியையுங் கண்டார். அவர் தன்னுடைய புதிய பென்சிலுக்கு ஒரு தனி உரிமை (Patent)யை எடுத்துக்கொண்டார். அந்த உரிமையை விற்றதால் லிப்மனுக்கு ஒரு லட்சம் டாலர் கிடைத்ததாம்.

வாசிங்டன் நகரில் கிளார்க் வேலை பார்த்து வந்த ஒருவர் ஒருநாள் தெருவில் காருக்காகக் காத்துக்கொண்டிருந்தாராம். கார் வருவதற்கு நேரமாகும்போலிருந்தது. அவர் அங்கே கீழே கிடந்த ஒரு கொண்டை ஊசி (Hair pin)யை எடுத்து விளையாட்டாக விரலுக்கிடையில் வளைத்து சுற்றிக்கொண்டிருக்கும்பொழுது அவருக்கு ஒரு எண்ணம் தோன்றியது. அவருடைய கையிலிருந்த அக்கொண்டைஊசி, எப்படியோ வளைந்து, பல காகிதங்களை சேர்த்துப்பிடிக்கவல்ல ஒரு கருவிபோல் அமைந்திருந்ததை அவர் கண்டார். அதன் மூலம் பிறந்ததே இன்று நாம் உபயோகிக்கும் 'பேப்பர் கிளிப்'. இக்கருவியின் தனி உரிமை மூலம் அவருக்குப் பெரும்பொருள் கிடைத்தது.

ரப்பராலான அடிகளைக்கொண்ட செருப்புகளை முதன்முதல் செய்துகாட்டியவர் டானியல் ஓ சுலிவன் (Daniel O' Sulivan) என்பவராகும். அவர் மின்சாரம் சம்பந்தப்பட்ட பல பொறிகளை ஆராய்ந்துபார்க்கும் வேலைகளில் ஈடுபட்டிருந்தார். மின் அதிர்ச்சி ஏற்படாமலிருக்க கீழே ஒரு ரப்பர் விரிப்பைப் போட்டு அதன்மேல் நின்றுகொண்டு வேலை செய்து வந்தார். ஆனால் அடிக்கடி ரப்பர் விரிப்பைப் போட்டுக்கொள்ள மறந்துவிடுவார். அச்சமயங்களிளெல்லாம் அவர் மின் அதிர்ச்சிக்குள்ளாவார். இந்த சங்கட நிலையிலிருந்து விடுபட ஒரு நாள் அவர் அந்த ரப்பர் விரிப்பிலிருந்து தனது செருப்புகளுக்குச் சேரும்படியாக இரண்டு துண்டுகள் வெட்டியெடுத்து அவைகளை தனது செருப்புகளின் அடியில் வைத்து சிறு ஆணிகள் மூலம் அடித்துக்கொண்டார். அது அவருக்கு மிகவும் வசதியாகத் தென்படவே ரப்பராலான அடிகளைக் கொண்ட செருப்புகளைத் தயாரிக்கலாம் என்று கண்டார். அதற்கு தனி உரிமையும் பெற்று பெரும்பொருள் அடைந்தார்.

சென்ற நூற்றாண்டின் மத்தியில் அமெரிக்காவில் மாட்டுப்பண்ணைக்காரர்களெல்லாம் தங்கள் தங்கள் மாட்டு மந்தைகளுடன் மேற்கு நோக்கி நகரவேண்டிய காலம் வந்தது. அங்கே மரத்தினாலும், கம்பியினாலும் ஆன வேலிகளுக்கிடையே மாடுகள் அடைத்து வைக்கப்பட்டிருந்தன. ஆனால் இடம் மாறுபட்டதின் காரணமாகவோ என்னவோ மாடுகள் அந்த வேலியை தகர்த்துவிட்டுத் தாண்டிப்போக ஆரம்பித்தன. இதைப்பார்த்த மேய்ப்பாளர்கள் வேலிகளிடையே ஈட்டிகளையும், கூர்மையான ஆயுதங்களையும், முட்களையும் பொருத்தி மாடுகள் வெளியேறுவதைத் தடுத்தனர். பின்னர் மாடுமேய்க்கும் ஒரு சிறுவன் முதல் முள்வேலியை உண்டாக்கினான். வேலிகளில் இருக்கும் கம்பிகளை இரு முனைகளும் கூர்மையாக உள்ள சிறு கம்பிகள் கொண்டு பின்னினான். இதைக்கண்ட ஜோசப் கிளிடென் (Joseph Glidden) என்பவர் 1873-ல் அதற்கு முட்கம்பி (Barbed Wire) என்ற பெயரில் ஒரு தனி உரிமை பெற்றார். உற்பத்தியாளர் ஒருவர் அந்த உரிமையை 60,000 டாலர் கொடுத்து வாங்கியதோடு, உற்பத்தியாகும் ஒவ்வொரு நூறு பவுண்டு எடைக் கம்பிக்கும் கால் டாலர் வீதம் உரிமைப் பங்காகக் (Royalty) கொடுப்பதற்கும் உடன்பட்டார். அதன உரிமைப் பங்குத்தொகை மட்டும் பத்துலட்சக்கணக்கில் கிடைத்ததாம்.

பவுடர் டின்களில் காணப்படும் சிறு மூடிகள்—சிறிது சுற்றுவதால் மூடிக்கொள்வது—மிகச் சாதாரணமான அமைப்பைக் கொண்டதேயாகும். ஆனால் அதை முதன்முதல் கண்டுபிடித்த வில்லியம் கென்டால் (William Kendall) என்பவருக்கு அதன் தனி உரிமையை விற்றதில் 25,000 டாலர் கிடைத்ததாம்.

இன்று எல்லோரும் உபயோகிக்கும் ஊக்கு (Safty Pin) போன்று ஒரு பொருள் பன்னெடுங்காலமாகவே பல்வேறு அமைப்புகளில் உபயோகத்தில் இருந்துவந்திருக்கிறது. ஆனால் எவரும் அதன் தனியுரிமையைக் கொள்ளவில்லை என்பதை யறிந்த வால்டர்அன்ட் (Walter Hunt) என்பவர் 1849-ல் அதற்கு ஒரு உருவங்கொடுத்து அதன் தனிஉரிமையையும் பெற்றுப் பெரும்பொருள் அடைந்தார். ஊக்கைக் கண்டுபிடித்தவர் அவரே என்ற பேரையும் பெற்றார்.

வில்லியம் பெயின்டர் (William Painter) என்பவர் கண்ட ஒரு சிறிய கண்டுபிடிப்பால் அவரும் அவரது மரபினரும் பெரும்பொருளீட்டும் நிலையை யடைந்தனர். அவர் கண்டுபிடித்தது, பீர் புட்டிகளையும், சோடாபுட்டிகளையும் காற்றுப்புக இயலாதவாறு மூடத்தக்கனவாய் அமைந்த ஒரு மூடியேயாகும்.

இன்று மணிப்பர்சிலும், தோல்பையிலும், சட்டைகளிலும் இன்னும் பலவகைகளிலும் பயன்படுத்தப்படும் சிப்பர் (Zipper) என்று சொல்லப்படும் இணைப்புப்பூட்டு நாடா சென்ற நூற்றாண்டின் இறுதியில் தோன்றியதாகும். விட்கோம்பு ஜட்சன் (Whitcomb J. Judson) என்பவர் அதற்கு முதன் முதலில் உருக்கொடுத்தவராகும். 1893-ல் சிகாகோ நகரில் நடைபெற்ற உலகப் பொருட்காட்சிசாலையில் ஜட்சன் அதன் மாதிரி ஒன்று வைத்திருந்தார். ஆனால் அதை ஒரு நாடாவைப்போன்று செய்து ஒரு வளையத்தை இழுத்தால் மூடிக்கொள்ளும்படியாகவும், திரும்பி இழுத்தால் திறந்துகொள்ளும்படியாகவும் செய்தது கிடேயன் சண்ட்பாக் (Gideon Sundback) என்பவராகும். ஜட்சன் தான் கண்டுபிடித்ததை மேற்கொண்டு ஆராயாமல் விட்டுவிட்டார். பின்னர் சண்ட்பாக், வால்கர் என்ற வழக்கறிஞர் ஒருவரின் தூண்டுதலால் அதை ஆராய்ந்து 1906ல் நழுவிச்செல்லும் இணைப்புப் பூட்டைக் கண்டுபிடித்தார். ஆனால் சில சமயங்களில் இணைப்பு வேலை செய்யாமல் இருந்தது. இதற்கிடையில் சண்ட்பாக் பிரிந்துசெல்ல, வால்கர் தனித்து தனது பிள்ளைகளுடன் மெட்வில் என்ற நகரில் சிப்பர் வாணிபம் செய்யமுற்பட்டார். வால்கர் ஒரு தையற்காரரையணுகி சிப்பரை மாலுமிகள் பணம் வைத்துக்கட்டிக் கொள்ளும் கச்சைகளில் பொருத்தித் தைக்குமாறு வேண்ட, அது நல்ல பயனைக் கொடுக்க ஆரம்பித்தது, 1920 வரையில் 30 தொழிலாளர்களுடன் கூடிய ஒரு சிறிய கம்பெனியாகத்தான் வால்கர் கம்பெனி விளங்கியது. அதேயாண்டு குட்ரிச் (Goodrick) என்ற கம்பெனியார் மேலுரைகொண்ட செருப்புகளில் சிப்பரைப் பொருத்தலாம் என்று கண்டு அதன் உரிமையை பெருஞ்செல்வம்கொடுத்து வாங்கினர். 'சிப்பர்' என்ற பெயரை குட்ரிச் கம்பெனியார்தான் கொடுத்து அதற்கும் ஒரு தனி உரிமை எடுத்திருந்தனர்.

இத்தகைய சிறுசிறு கருவிகள் கண்டுபிடிக்கப்பட்டதைப்போலவே, சிக்கல் நிறைந்ததும், எல்லோராலும் போற்றப்படுவதுமான பொருள்கள் பல இமைப்பொழுது ஆராய்ச்சியினாலும் எதிர்பாரா நிகழ்ச்சிகளினாலும் கண்டுபிடிக்கப்பட்டனவாகும்.

இன்று நாம் எல்லோரும் உபயோகிக்கும் மை ஒத்தும் தாள் (Blotting Paper) இரு எதிர்பாரா நிகழ்ச்சிகளில் பிறந்ததென்று கூறப்படு

கிறது. காகிதத் தொழிற்சாலையொன்றில் தொழிலாளி தூங்கிக்கொண்டிருந்த காரணத்தால் படிவான காகிதக்குழம்பு கொஞ்சம் இயந்திரத்திற்குள் செல்லாமல் நின்றுவிட்டது. அதனால் அது வீணாகிய நிலையில் வெளியில் எடுத்துப் போடப்பட்டது. அங்கு வேலை பார்த்துவந்த ஒரு கிளார்க் வீணாகிய தாளில் ஒரு துண்டை எடுத்து தனது மேசையில் சிந்தியிருந்த மையைத் துடைத்தார். அப்போது மை முழுவதையும் அந்தக் காகிதம் வெகுசீக்கிரத்தில் உறிஞ்சிவிட்டதைக் கண்டார். இதிலிருந்து மை துடைக்கும் தாள் கண்டுபிடிக்கப்பட்டது.

பலவிதப் பொட்டணங்களிலும் அட்டைப் பெட்டிகளிலும் சுற்றப் பயன்படுத்தப்படும் கண்ணாடித்தாள் (cellophane) பிராண்டன்பெர்கர் (Brandenberger) என்ற சுவிட்சர்லாந்து பிரஞ்சுக்காரரால் கண்டுபிடிக்கப்பட்டதாகும். 1908ல் அவர் மரக்குழம்புடன் ரேயான் (Rayon) என்ற பொருளைச் சேர்த்து ஆராய்ந்துகொண்டிருக்கும்பொழுது, ஒளி ஊடுருவிச் செல்லும்படியான மெல்லிய ஏடு ஒன்று படிவதைக் கண்டார். அதை மேலும் ஆராய்ந்து 1912-ல் தற்போதுள்ள கண்ணாடித்தாளைக் கண்டுபிடித்தார். 1923-ல் து பாண்ட் (Du Pont) என்பவர் அமெரிக்கத் தனியுரிமையைப்பெற்று மேலும் செம்மையாக்கி நீர்புகமுடியாத கண்ணாடித் தாளைக் கண்டுபிடித்தார்.

ரேயான் (Rayan) என்ற செயற்கை பட்டும் எதிர்பாரா நிகழ்ச்சி ஒன்றின் மூலம்தான் கண்டுபிடிக்கப்பட்டதாகும். கவுண்ட் ஹில்லேர் (Count Hillair) என்பவர் பலவித ரசாயனப் பொருள்களை சேர்த்து ஒரு புட்டியில் காய்ச்சிக்கொண்டிருக்கும்போது புட்டி சாய்ந்து அவருடைய கைகளில் கூழ் நிலையிலுள்ள அந்தப் பொருள் சிதறி வழிந்தது. அதை உடனே அகற்றமுடியவில்லை மிகவும் இறுகலாகப் பிடித்துக்கொண்டது. ஆனால் விரல்களின் அசைவினால் அப்பொருள் நூல் இழைபோல் உண்டாகவே அதை நன்றாக ஆராய்ந்தார். அதன் முடிவாகவே ரேயான் என்ற செயற்கை பட்டு உற்பத்தியைக் கண்டுபிடித்தார்.

இதேபோன்று பலப்பல பொருள்கள், எதிர்பாராத சில நிகழ்ச்சிகளினாலும், சிறிதுநேர ஆராய்ச்சிகளினாலும் கண்டுபிடிக்கப்பட்டு பலருக்குச் செல்வம் சேர வழியை ஏற்படுத்துகின்றது.

அறிவியல் வளரவளர, மனித வாழ்க்கை வசதிகள் பெருகப்பெருக புதிய புதிய கருவிகளின் தேவைகளும் அதிகமாகிக்கொண்டே போகின்றது. எல்லோருக்கும் பயன்படும் வகையில் ஒரு எளிய கருவியைக் கண்டுபிடித்தால் நீங்கள்கூடப் பெரும்பொருள் சேர்க்கலாம்.

அறிவுப்புதிர் - 2.

சென்ற இதழில் வெளிவந்ததைப்போலவே நமது உடலைப்பற்றிய சில கருத்துக்கள் கீழே கொடுக்கப்பட்டிருக்கின்றன. இவற்றில் எவை சரியானவை, எவை தவறானவை என்பதைக் காட்டத் தனித்தனியே குறியிட்டுக்கொள்ளவும். பின் உங்களது விடைகளை 34-ம் பக்கத்தில் கூறப்பட்டிருக்கும் விடைகளுக்குச் சரியாக இருக்கின்றதாவென்று பார்த்துக்கொள்ளவும்.

1. நமக்கு வியர்வை ஏற்படும்பொழுது உடல் குளிரச் செய்யப்படுகிறது.

சரி...... தவறு......

2. நமது உடலின் உள்ளுறுப்புகளில் சிக்கலான அமைப்பைக் கொண்டிருப்பது சிறுநீர்ப்பையாகும்.

சரி...... தவறு......

3. காய்ச்சல், ஜன்னி—இந்த நேரங்கள் தவிர மற்ற நேரங்களில் நமது உடலின் வெப்பநிலை மாறுபடாமல் ஒரே சீராக இருக்கின்றது.

சரி...... தவறு......

4. மூக்கின் வழியாக உட்செல்லும் காற்று நுரையிரலுக்குள் நுழைவதற்குமுன் உலர்த்தப்படுகிறது.

சரி...... தவறு......

5. பார்வை நன்றாக ஏற்பட மூக்கு, புருவங்கள், கன்னத்தின் எலும்புகள் முதலியன பெரிதும் உதவுகின்றன.

சரி...... தவறு......

6. தூரத்திலுள்ள பொருள்களையும் அருகிலுள்ள பொருள்களையும் பார்ப்பதற்கு ஏற்றவாறு கண் பாவையின் அளவு மாறுபடுகிறது.

சரி...... தவறு......

7. ஒருதடவை நன்றாக இழுத்து மூச்சு விடுவதால் நுரையீரலிலுள்ள காற்று முற்றிலும் வெளியேற்றப்படுகிறது,

சரி...... தவறு......

563

தொடர்கதை

(சென்ற இதழ்த் தொடர்ச்சி)

சகுந்தலா சிறைக்குள் புகுந்து நாலரை மாதங்களுக்கு மேலாகியது. சிறையின் சட்ட திட்டங்கள், ஒழுங்கு எல்லாம் ஒருவகையான அமைதியை அவளுக்குத் தந்தன. பகல் நேரங்களில் பலவகைப்பட்ட பெண் கைதிகளுடன்—குற்றமிழைத்தவர்கள், கொடூரமானவர்கள், கோழைகள், பொறுமைக்காரர்கள், தவறி வந்தவர்கள், தடுக்கி விழுந்தவர்கள், இத்தகையவர்களுடன் சகுந்தலா கடினமில்லாத வேலைகள் பல செய்யவேண்டியிருந்தது. பெண்கள் கூட்டமாதலால் பேச்சுகள், சண்டைசச்சரவுகள், கூக்குரல், அழுகை எல்லாம் இருந்தன. சண்டைபோடுபவர்களைத் தவிர, மற்றவர்களும் நடக்கும் சண்டையில் ஆர்வங் காட்டினார்கள். சிறைவாழ்க்கையில் அவை தாம் மாறுபட்டனவாகவும், பொழுதுபோக்காகவும் இருந்தன. இரவு வந்ததும் அறைகள் பூட்டப்பட்டதும், அடைபட்ட பெண்களிடமிருந்து பாட்டு, வசவு, அழுகை எல்லாம் சிறிதுநேரம் வரும். எட்டு, ஒன்பது ஆனதும் சத்தம் அடங்கி, அமைதி நிலவும்.

கம்பியோரத்தில் உட்கார்ந்தபடி, சகுந்தலா வெளியுலகை—பரந்த வானைப் பார்த்துக் கொண்டிருப்பாள். அவள் வந்ததிலிருந்து வானம் நான்குதடவை இருண்டு, ஒளிபெற்றது. இப்பொழுது தேய்ந்த திங்கள் வளர்ந்து, முழுவடிவத்தை நோக்கிப் போய்க்கொண்டிருக்கிறது. இன்னும் ஒன்றரை மாதம்—ஆறு வாரங்கள் சகுந்தலா வெளியில் வந்துவிடுவாள்.

அந்த இரவு நேரங்களில் சகுந்தலாவின் மனம் பின்னோக்கிச் செல்லும். அவளுடைய சிற்றூர், சிற்றப்பா, சின்னம்மா, உறவினர்கள், பள்ளிக்கூடம், அங்கு படித்த குழந்தைகள், மடம், சென்னையில் அவள் சுற்றியது, டாக்டர் தங்கம், அனாதைச் சிறுவர் இல்லம், இப்படி ஒவ்வொன்றாக மாறிவந்தன. படக்காட்சியில் வந்துபோவதைப்போல, கழிந்த வாழ்வு—இறந்தகாலம் அவள் மனத்திரையில் நகர்ந்தது. சில இடங்கள் அவளுக்குப் பிடித்தமான இடங்கள், மெதுவாகக்கடந்தன, பிடிக்காத இடங்கள்—அவள் மறந்துவிடமுயன்ற பகுதிகள் வேகமாகச் சுழன்றன. வேண்டாத பகுதிகள் அவைகளையும் பார்க்கத்தான் வேண்டியிருந்தது. படத்தணிக்கையாளர்களைப்போலப் பிடிக்காத பகுதிகளை வெட்டித் தள்ளமுடியவில்லை. வாழ்க்கைச் சுருளில் ஒரு தடவை ஒரு காட்சி எடுக்கப்பட்டுவிட்டால், அதை மாற்றவோ, அழிக்கவோ யாராலும் முடியாது. சகுந்தலா தனது வாழ்க்கை சென்றவழியைத் திரும்பப் பார்த்து முடிக்கும் பொழுது, கடைசியாகக் குலசேகரன் இனிய முகம், புன்முறுவல், தலையிரை ஒதுக்கி நிமிர்ந்து அவன் பேசும் காட்சி அவள் முன் தோன்றும். அதுவரை அவள் பட்ட மன வேதனை, வருத்தம் மறைந்துவிடும். அதற்குப் பின் அவளுடைய எதிர்காலம்—மனதுக்குப் பிடித்த கனவு ஆரம்பமாகும்.

குலசேகரன் "அடுத்த சனிக்கிழமை நான் வருவேன்!" "புதன்கிழமை இருபத்திரண்டாந்தேதி எனக்கு வேலையிருக்கிறது. அதற்காக இங்கு வருகிறேன்" என்று சொல்லிவிட்டுப்போவான். சகுந்தலா அடுத்த சனிக்கிழமை எப்பொழுது வருமென்று உன்னிப்பாகக் காத்துக்கொண்டிருப்பாள். சிலசமயங்களில் திடீரென்று ஓரிரு நாட்கள் முன்னதாகக் குலசேகரன் வந்துவிடுவான்.

"இன்னும் இரண்டு நாள் கழித்து வந்துவிடுவதாகச் சொன்னீர்கள்?"

"அதற்குள் அவசரமான வேலையொன்று வந்தது, அதற்காக வரவேண்டியிருந்தது."

குலசேகரனுக்கு அப்படியொன்றும் முக்கியமான வேலைகள் இருக்காது. சகுந்தலாவைப் போல அவனும் அடுத்தவார நாட்களை எண்

ணிக்கொண்டிருப்பான். சில சமயங்களில், நாட்கள் அதிகமானதாகத் தோன்றும். அலுப்புத்தட்டியதும் திடீரென்று வேலூருக்குத் தன்காரில் புறப்பட்டுவிடுவான். அவன் சிறைக்குள் இல்லை. ஆதலால் நினைத்த நேரத்தில் சிறைக்குள் போகமுடிந்தது. வேலூர் போய் திரும்பிவந்ததும், தன்னுடைய குறிப்புப் புத்தகத்தில் சகுந்தலாவைப் பார்த்ததைப் பற்றி எழுதிவைப்பான். முதலில் எழுதப் பட்டவை மிகச் சுருக்கமாக இருந்தன. பின்பு வரவர குறிப்பு வளர்ந்து வந்தது.

" இன்றைக்குச் சகுந்தலாவைச் சந்தித்தேன். உற்சாகமின்றி மனச்சோர்வுடன் காணப்பட்டாள்."

" சிறைவாழ்க்கையில் முதலில் ஏற்பட்ட கலக்கம் சகுந்தலாவைவிட்டு அகன்றுவிட்டது. அவள் முகத்தில் நம்பிக்கையும், அமைதியும் காணப்படுகின்றன. முதலிரண்டு தடவைகளைவிட அதிகநேரம் நான் பேசிக்கொண்டிருந்தேன்."

" இன்று நான் அரைமணிநேரம் தாமதமாகச் சென்றேன். சகுந்தலா நான் வருவதற்குக் காத்துக்கொண்டிருந்திருக்கிருள்போலும். நான் போய், அழைத்துவரச்செய்ததும், மிகுந்த பரபரப்புடன் வந்தாள். என்னைப் பார்த்ததும், ஒருகணம் வாசற்படியில் நின்று உற்றுக் கவனித்துப் பார்த்துவிட்டு, வந்து என் எதிரே உட்கார்ந்தாள். வந்திருப்பது யாரென்று அவள் பார்த்தது எனக்கு ஆச்சரியமாக இருந்தது.

எனது ஆச்சரியத்தை அவளும் கவனித்திருக்கவேண்டும்.

" நீங்கள் மூன்றுமணிக்கு வருவதாகச் சொல்லியிருந்தீர்கள். அந்த நேரத்தில் வராததால், எங்கே வராமலே போய்விடுவீர்களோ என்று நினைத்தேன் " என்று சகுந்தலா சொல்லிவிட்டு, வெளிப்பக்கம் பார்த்தபடி உட்கார்ந்தாள். அவள் கண்ணில் நீர் ததும்பிக்கொண்டிருந்தது. பாவம்! அரைமணி நேரம் காத்திருந்ததில், அவள் மிகவும் நினைந்துத் துன்பபபட்டுவிட்டாள். அவளைக் காக்க வைத்ததும் என்மேல் பிசகுதான். அதிலிருந்து நான் போகும்பொழுது நேரங்கழித்துப் போவதில்லை, ஒருமணி, இரண்டுமணி நேரம் முன்னதாக போய்விடுவதெனத் தீர்மானித்தேன்."

" இன்றைக்குச் சகுந்தலா சொன்னது என் சிந்தனையைக் கிளறியது.

அவள் சொன்னாள், 'மாதக்கணக்கில், ஆண்டுக்கணக்கில், ஒரு வீட்டைவிட்டோ, தெருவைவிட்டோ வெளிக்கிளம்பாதவர்கள் பலர் இருப்பார்கள். ஆனல் அவர்கள்கூடச் சிறைக்குள் வந்தால் வேதனைப்படுவார்கள் " பேச்சுவாக்கில் வந்ததோடு, அது நின்றுவிட்டது. அதைப்பற்றி விளக்கமாக நாங்கள் பேசவில்லை.

நான் திரும்பிவரும்பொழுது அவள் சொல்லியது மீண்டும் நினைவுக்கு வந்தன. வீட்டைவிட்டு, தெருவைவிட்டுப் போகாமல் இருக்கிருர்களென்ருல், அது அவர்களுடைய விருப்பத்தால் இருக்கிருர்கள். போகமுடியும், ஆனல் போகவில்லை. அதில் கட்டாயமொன்றுமில்லை. ஆனல் அந்த விருப்பம்—தான் விரும்பினல் போகமுடியும் என்ற எண்ணம் சிறைச்சாலையில் மறுக்கப்படுகிறது. இந்த சுவற்றைத் தாண்டி நீ போகக்கூடாது, இந்த அறைக்குள்தான் நீ அடைபட்டுக் கிடக்க வேண்டும், என்ற கட்டாயம் சிறைக்குள் வந்துவிடுகிறது. அந்தக் கட்டாயம்—தடை தண்டனையாகிறது.

ஆங்கிலக் கவி மில்டன் எழுதிய செய்யுளடி என் ஞாபகத்துக்கு வந்தது—'சுவர்க்கத்தில் கிடைக்கும் அடிமை வாழ்வைவிட, நரகத்தில் கிடைக்கும் சுதந்தர வாழ்வு மேலானது!'

இன்னும் ஆறு வாரங்கள் சகுந்தலா வருவதற்கு!"

குலசேகரன் மறுதடவை போனபொழுது, சகுந்தலா அவனுக்கு முன்னதாகவே வந்து உட்கார்ந்திருந்தாள். குலசேகரன் ஆச்சரியமடைந்தான். ஜெயிலர் சிரித்துக்கொண்டு " குறித்த நேரத்தில், நீங்கள் வந்துவிடுவீர்களென்பது தெரியும். ஆதலால் முதலிலேயே அவர்களை அழைத்துவந்தேன்." என்று எழுந்துபோனர். குலசேகரனும், சகுந்தலாவும் பேசிக்கொண்டிருக்கும்பொழுது, அவர் எழுந்துபோய்விடுவது வழக்கம்.

பேசி முடிந்ததும், குலசேகரன் எழுந்து ஜெயிலரிடம் வந்து " என்றைக்குச் சரியாக விடுதலை கிடைக்கும்?" என்று கேட்டான். ஜெயிலர் தன் புத்தகத்தைப் புரட்டிப் பார்த்து " அடுத்தமாதம் பதினெட்டாந் தேதி!" என்று குறிப்பிட்டார். இன்னும் இருபது நாட்கள்தாம்! ஆறுவாரம் என்று கணக்குப் போட்டுக்கொண்டிருந்த சகுந்தலாவுக்கு ஆச்சரியத்தை அளித்தது. ஆறுமாதத்தில், விடுமுறைநாட்கள், ஒழுங்குக்காகத் தள்

ளப்படும் நாட்கள் இவைகளைக் கணக்கில் அவள் எடுத்துக்கொள்ளவில்லை.

"நான் போய்வருகிறேன்! இருபது நாட்கள் மிகுதி!" என்று குலசேகரன் விடைபெற்றுக்கொண்டான்.

"டாக்டர் தங்கத்திடம் நான் ஒரு பை கொடுத்தேன். அது பத்திரமாக இருக்கிறதா வென்று கேட்டுக்கொள்ளுங்கள். டாக்டர் தங்கத்தையும் டாக்டர் சஞ்சீவியையும் பார்த்து இரண்டு மாதத்திற்குமேலாகியது. அவர்களைக் கேட்டதாகச் சொல்லுங்கள்!"

"சொல்லுகிறேன்! ஆனால் தங்கத்திடம் கொடுக்கப்பட்டது என்ன பை?"

சகுந்தலா சற்றுத் தயங்கினாள், "கடைசியாக நான் கொடுத்த பை என்று சொல்லுங்கள். அவர்களுக்குத் தெரியும்!"

குலசேகரன் ஜெயிலருக்கு வணக்கந் தெரிவித்துவிட்டு, வெளியே வந்தான்.

* * *

டெலிபோன் மணியடித்தது. தங்கம் எடுத்துப் பேசினாள்.

"தங்கம் பேசுகிறேன். யாரது?"

"சேகரன்!"

"சேகரா? ஏன் இரண்டுவாரமாக உன்னைக் காணோம்? நீ வருவாயென்று போன சனிக்கிழமை ஆஸ்பத்திரியில் காத்திருந்தேன். உனக்காகக் காத்திருந்தது, மண்குதிரையை நம்பி ஆற்றில் இறங்கினது மாதிரிதான்!"

"நீ ஒன்றும் கரைந்துவிடவில்லையே!"

"நான் மண்குதிரையில்லையே! அது சரி! ஏன் வரவில்லை?" சேகரனைக் கோபத்துடன் கேட்பதில், தங்கத்திற்குத் தனித்திருப்தி ஏற்படும்.

"கோபித்துக்கொள்ளாதே தங்கம்! நான் வேலூர் போகவேண்டியிருந்தது!"

"சொல்லியிருந்தால், நானும் உன்னுடன் வந்திருப்பேன். எனக்கும் பொழுதுபோகவில்லை."

"மிக அவசரமாகப் போகவேண்டியிருந்தது. ஆதலால் சொல்ல நேரமில்லை."

"சகுந்தலாவைப் பார்த்தாயா?"

"என் வேலை முடிய நாழியாகிவிட்டது."

"பார்க்கவில்லையா?"

"பார்த்தேன். ஆனால் நீண்டநேரம் பேச முடியவில்லை" என்று குலசேகரன் பச்சைப் பொய்யைச் சொன்னான். அவன் வேலூர் போனது சகுந்தலாவைப் பார்ப்பதற்குத் தான். ஆனால் அதைத் தங்கத்திடம் தெரிவிக்கக் கூச்சப்பட்டான். தங்கத்திற்குத் தெரிந்துவிட்டால், அவள் கேலிசெய்ய ஆரம்பிக்கலாம். எப்படியும் தெரிவித்துதான் ஆக வேண்டும். சகுந்தலா விடுதலை பெற்றுத் திரும்பியதும் தெரிவிக்கலாமென்று குலசேகரன் உத்தேசித்திருந்தான்.

"சகுந்தலா எப்படியிருக்கிறாள்?"

"நன்றாகத்தான் இருக்கிறார்கள். உன்னையும் டாக்டர் சஞ்சீவியையும் பற்றிக் கேட்டதாகச் சொல்லச்சொன்னார்கள்."

"நானும் டாக்டர் சஞ்சீவியும் பார்த்து நாளாகிவிட்டது. அடுத்தவாரம் போகவேண்டும். இல்லை, அடுத்தவாரம்கூட முடியாது. டாக்டர் சஞ்சீவி பங்களூர் போகிறார். இன்னும் இரண்டுவாரங்கழித்து போகலாம்" என்று சுவற்றில் மாட்டியிருந்த காலண்டரைப் பார்த்துத் தங்கம் கணக்கிட்டாள்.

"இன்னும் இரண்டு வாரத்துக்கெல்லாம் இந்த மாதம் பதினெட்டாந்தேதி சகுந்தலா விடுதலையடைந்துவிடுவார்கள்."

"பதினெட்டாந் தேதியா? உண்மையாகவா? என்னால் நம்பமுடியவில்லை, ஆறுமாதமென்று சொன்னார்கள். இப்பொழுது நான்கு மாதம் அல்லது ஐந்துமாதத்துக்குக் குறைவாகத்தான் இருக்கும். எப்படி வரமுடியும்?"

"விடுமுறை நாட்கள், மற்றத் தள்ளுபடிகள் கழித்ததுபோக, இருபதாந்தேதி வந்துவிடுவார்களென்று ஜெயிலர் சொன்னார்."

"அப்படியானால் நல்லது. டாக்டர் சஞ்சீவிக்குச் சொல்லவேண்டும். அவரும் ஆச்சரியமடைவார்!"

"தங்கம்! சகுந்தலா என்னிடம் பேசும்பொழுது உன்னிடம் ஏதோ ஒரு பை கொடுத்திருப்பதாகவும் அது பத்திரமாக இருக்கிறதாவென்றும் கேட்கச் சொன்னார்கள்."

"பையா? என்ன பை?" என்று தங்கம் திருப்பிக்கேட்டாள்.

"எனக்கும் தெரியவில்லை. நான் கேட்டதற்கு அவர்களும் சரியாகச் சொல்லவில்லை."

" எனக்குச் சரியாக ஞாபகம், இல்லை எந்தப் பையென்று" தங்கம் நினைத்துப் பார்த்தாள். சகுந்தலா தன்னிடம் எந்தப் பையும் கொடுத்ததாக அவள் ஞாபகத்திற்கு வரவில்லை.

"கடைசியாக அவள் உன்னைப் பார்த்த பொழுது கொடுத்ததாம்!"

வெளியில் காலடிச்சத்தம் கேட்டது. கமலநாதன் உள்ளே நுழைந்தான். தங்கம் பேசுவது அவன் காதில் விழுந்தது.

"ஓ! அந்தப் பையா நான் பத்திரமாக வைத்திருக்கிறேன்!" சிறைக்குப் போகுமுன்பு சகுந்தலா கொடுத்த காகிதப்பை தங்கத்தின் கவனத்திற்கு வந்தது.

" சேகர்! உன்னை எப்பொழுது மீண்டும் பார்க்கலாம்?"

கமலநாதன் உற்றுக்கேட்டான், வேறுபக்கம் திரும்பி, கவனிக்காதவன்போல்.

மறுப்பக்கத்திலிருந்துவந்த பதில் அவனுக்குத் தெரியாது. தங்கம் பேசுவது மட்டும்தான் அவனுக்குக் கேட்டது.

" நான் வந்துவிடட்டுமா?"

தன் கைக்கடிகாரத்தைப் பார்த்துக் கொண்டு தங்கம் பதிலைக் கேட்டுக்கொண்டிருந்தாள்.

" நாளைக்கு! மாலை ஐந்துமணிக்குச் சரியாக! நீ ஏமாற்றமாட்டாயே? சரி!" என்று போனை வைத்துவிட்டு, தங்கம் எழுந்தாள். அப்பொழுதுதான் தன் கணவன் நின்றுகொண்டிருப்பது தெரிந்தது.

கமலநாதன் அன்று முழுவதும் மிகவும் கண்காணிப்புடன் தங்கத்தைப் பார்த்து வந்தான். அவள் என்ன செய்கிறாள்? எங்கு போகிறாள்? டெலிபோனில் என்ன பேசுகிறாள்? என்றெல்லாம் கவனித்துவந்தான்.

கீழே மணியடிக்கும் சத்தம் கேட்டது. குலசேகரன்தான் வந்திருக்கவேண்டும் என்று நினைத்துக் கமலநாதன் எட்டிப்பார்த்தான். தங்கம்தான் கதவைத் திறந்தாள். ஆனால் உள்ளே வந்த தபால்காரன் மீண்டும் வெளியே போனான்! மாடியிலிருந்து பார்த்த கமலநாதன் ஏமாற்றத்துடன் உள்ளேபோய் உட்கார்ந்தான்.

தபால்காரன் என்றதும், தங்கத்திற்கு ஏதாவது கடிதம் வந்திருக்கும், அதை ஆவலுடன் எதிர்பார்த்திருப்பாள் என்று கமலநாதனுக்குச் சந்தேகம் வந்தது. கமலநாதன் வேகமாகக் கீழே இறங்கிவந்தான். தபால்காரன் கொடுத்த கடிதங்களை ஒரு மேஜைமேல் வைத்துவிட்டுத் திரும்பினாள்.

தங்கம் மேலே போனதும், கமலநாதன் அந்தக் கடிதங்களையெல்லாம் எடுத்துப் பார்த்தான். தங்கத்திற்குச் சில கடிதங்கள் இருந்தன. அவையெல்லாம் மருந்துக் கம்பெனிகள் அனுப்பும் விளம்பரத்தாள்கள், புதிய மருந்துகளின் அறிவிப்புகள்!

(தொடரும்)

அழகுள்ள பெண்ணும் அழகற்ற ஆணும்

உலக அழகி என்று ஒருத்தியைத் தேர்ந்தெடுக்கும் விழா, அண்மையில் அமெரிக்காவில் கலிபோர்னியாவைச்சேர்ந்த லாங்கு பீச்சு (Long Beach) என்ற இடத்தில் நடைபெற்றது.

சுவீடனைச் சேர்ந்த இல்லிவீ ராம்பின் (Hillievi Rombin) என்பவள் உலக அழகியாக இவ்வாண்டு தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறாள். அவள் சுவீடன் நாட்டு அழகியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டு உலக அழகிப் போட்டியில் கலந்துகொண்டவள்.

இந்த உலக அழகிப் போட்டியில் கலந்துகொண்டவர்களில் முக்கியமான அழகிகளாகக் கருதப்பட்டவர்கள் இலங்கை, எல் சால்வாடர். ஜெர்மனி. சப்பான், சுவீடன் ஆகிய நாடுகளைச் சேர்ந்தவர்களாவார்கள். இவர்களில் சுவீடன் அழகியே உலக அழகியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டாள்.

இதற்கு நேர்மாறான போட்டிவிழா ஒன்றை 'வட இத்தாலியைச் சேர்ந்த லுசர்னு சான் ஜியோவன்னி என்ற இடத்திலுள்ள மக்கள் கொண்டாடியிருக்கிறார்கள். அது அழகற்ற ஆணைத் தேர்ந்தெடுக்கும் விழாவாகும்.

ஆறு அழகுள்ள பெண்கள் நீதிபதிகளாக அமர்ந்து. அழகற்ற ஆண்கள் 28 பேர்களைப் போட்டியில் ஈடுபடுத்தி. எஞ்சலோ சசனோவா (Angelo Casanova) என்பவனை அழகற்ற ஆண் என்பதாகத் தேர்ந்தெடுத்தார்களாம்.

இந்தச் செய்தி கசனோவாவைத் திடுக்கிடச்செய்ததாம். அவனுக்கு வயது 30.

பரத்தையர் கையில் பட்டபாடு!

[எழினி]

இளம் மணமக்கள்! திருமணம் நடந்தேறிச் சிலபல திங்கள்களே கழிந்திருக்கின்றன! இருவரும் இல்லற வாழ்வை இனிது நடத்தி வருகின்றனர்!

பாணன் ஒருவன் தலைவனோடு தொடர்பு கொள்ளுகிறான். அவன் சிறிய யாழ் இயக்குவதிலே வல்லுநன். அவனது யாழினிசை அழகிய வண்டுகள் எழுப்பும் இம்மென்ற ஒலி போல் மிக்க இனிமை பயப்பதாக இருப்பதால், தலைவன் யாழிசை மாட்சியிலே ஒன்றி விடுகிறான். இதனால் தலைவனுக்கும் பாணனுக்கும் இடையில் நெருங்கிய நட்புறவு ஏற்படுகிறது.

தலைவன் இளைஞனாகவும், காதலின்ப வேட்கை மிக்கவனாகவும் இருப்பது கண்டு அதனைப் பயன்படுத்திக்கொள்ள முயலுகிறான் பாணன். தலைவனைப் பரத்தையர் சேரிக்கு அழைத்துச்சென்று, பரத்தையர் பலர்க்கு அறிமுகப்படுத்திவைப்பதன்மூலம், தான் தலைவனின் அன்பையும், பொருளையும் மிகவாகப் பெற வழி ஏற்படும் என்று கருதி அதற்கான முயற்சிகளில் பாணன் ஈடுபடுகிறான்.

பாணன், தலைவனிடம், பரத்தையரின் அழகு பற்றியும், அவர்களின் ஆடல்பாடல் இனிமை பற்றியும், அவர்களை எப்படி எளிதில் அடைந்து காதலின்பம் பெறலாம் என்பது பற்றியும் அடிக்கடி எடுத்துச்சொல்லிவருகிறான். பாணனின் நயமான பேச்சுகளில் தலைவன் மயங்குகிறான். பாணன் மூலம் பரத்தையர் இன்பத்தை நுகர அவாவுகிறான். ஒருநாள் தலைவியிடமும் தோழியிடமும் சொல்லாமல் பாணனோடு பரத்தையர் சேரிக்குப் போய்விடுகிறான்.

பாணன் பரத்தையர் பலரையும் தலைவனோடு தொடர்புபடுத்திவிடுகிறான். தலைவன் காலத்தையும், தனகைப்பொருளையும் செலவழித்துக்கொண்டு பரத்தையர் சேரியில் இன்பவாழவு நடத்திக்கொண்டிருக்கிறான்.

தலைவனைக் காணாமல் தலைவியும் தோழியும் தவிக்கிறார்கள். தலைவன் எங்கு போயிருக்கக்கூடும் என்று நீடு நினைந்துபார்க்கிறார்கள். அவர்களுக்கு ஒன்றும் புரியவில்லை. தலைவன் பொருள்தேடப் புறப்பட்டிருப்பானோ அல்லது போர்க்களத்திற்குச் சென்றிருப்பானோ அல்லது பெருங்கல்வி பயிலப் போயிருப்பானோ அல்லது அவனுக்கும் ஏதொன்றும் நிகழக்கூடாதது நிகழ்ந்ததோ என்றவாறெல்லாம் எண்ணி எண்ணி இருவரும் வருந்துகிறார்கள். சிலபொழுது தலைவனின் அறிவையும் ஆற்றலையும் நினைந்து; அவன் எப்படியும் விரைவில் வந்து சேர்ந்துவிடுவான் என்று மன அமைதிக்கொள்கிறார்கள்.

தலைவன் பாணன் ஒருவனோடு நெருங்கிய தொடர்பு கொண்டிருந்ததால், அப்பாணன் தலைவனைப் பரத்தையர் சேரிப்பக்கம் இழுத்துச் சென்றிருப்பானோ என்ற எண்ணம் தோழிக்குத் தோன்றுகிறது. அப்படிச் சென்றிருக்கமாட்டான் என்று தலைவி மாற்றுரை பகர்கிறாள். எதற்கும் பரத்தையர் சேரிப்பக்கம் சென்று பார்த்துவிட்டு வருவோம் என்ற எண்ணத்தோடு, தோழி, ஒருநாள் மாலை பரத்தையர் சேரிப்பக்கம் புறப்பட்டுச் செல்கிறாள்.

தன் கையில் ஏந்திய சிறிய யாழை மீட்டிக்கொண்டு பாணன் உடன்வரத், தலைவன், மாலைகள் அணிந்துகொண்டு, பெருமிதத்தோடுப், பரத்தையர் சேரியின் தெருவில் வந்துகொண்டிருப்பதைத் தோழி கண்டுகொண்டுவிடுகிறாள். சிறிதுநேரம் திகைத்துப்

போய் அப்படியே நின்றுவிடுகிருள். தலைவனின் நடவடிக்கைகளை மறைந்து நின்று காணலாம் என்று கருதித் தோழி அங்கு ஒரு பக்கம் ஒளிந்துகொள்கிருள்.

ஆடை அணிகலன்களால் தம்மை அழகுபடுத்திக்கொண்ட பரத்தையர் ஒவ்வொருவரும், தலைவன் தம் வீட்டிற்கு வருவான் என்று எதிர்பார்த்துத் தத்தம் தெரு முற்றத்தில் வந்து நிற்கிருர்கள். தலைவன் தெருவோடு நேராகச் செல்லும்போது, அவர்கள் ஒவ்வொருவரும் மனம் ஒடிந்து, ஓடோடியும் வந்து அவனது கையைப்பிடித்து இழுக்கிருர்கள். அவன், தன்மேல் தொத்தும் அவர்களை உதறித்தள்ளிவிட்டு மேற்கொண்டு நடந்து செல்ல முயலுகிருன். அவனுல் உதறித் தள்ளப்பட்டுக் கீழே விழும் பரத்தையர், சினத்தால் வெம்மையுற்று எழுந்து வெப்பமான கண்ணீர் கண்களில் வழிய மீண்டும் மீண்டும் போய் அவனைப்பற்றி இழுக்கிருர்கள். பல பரத்தையர் கூடிக்கொண்டு வெவ்வேறு பக்கம் இழுக்க, என்ன செய்வதென்று தோன்ருமல் தலைவன் திண்டாடிப்போகிருன். இத்தகைய இரங்கத்தக்க காட்சியைக் கண்டுகொண்டு தோழி இல்லம் திரும்புகிருள்.

தோழி, தலைவியிடம், தான் சேரியில் தலைவனைப் பாணனேடு கண்டதையும், அங்குக் காணப்பட்ட இரங்கத்தக்கக் காட்சியையும் தெளிவுபடுத்துகிருள். தலைவி அதுகேட்டு வருந்தி ஆருத்துயரடைகிருள்.

சிலநாட்கள் கழித்துத் தலைவன் தன் இல்லம் நோக்கி வருகிருன். வீட்டின் வாயிலண்டைத் தோழி நின்றுகொண்டிருக்கிருள். தலைவன் தன் போக்கு யாருக்கும் தெரியாது என்ற எண்ணத்துடன் பெருங்களிப்போடு வருகிருன். வாயிலை அடைத்துக்கொண்டு தோழி சினக்குறிப்போடு நிற்கிருள். தலைவன புன்சிரிப்பு பூத்த முகத்துடன் தோழியின் எதிரில் வந்து நிற்கிருன்.

தோழி : "என்ன ஒரே மகிழ்ச்சி?" (என்று ஏளனந்தோன்றக் கேட்கிருள்).

தலைவன் : "எல்லாம் உன்னையும் தலைவியையும் காணவேண்டும் என்பதால் ஏற்பட்ட மகிழ்ச்சிதான்!"

தோழி : "ஓகோ! இப்பொழுதுதான் அந்த நினைவு உனக்கு ஏற்பட்டதோ?"

தலைவன் : "எனக்கு எப்பொழுதுமே அந்த நினைவு உண்டே!"

தோழி : "அந்த நினைவுகொண்ட நீ இவ்வளவு நாட்களாக எங்கேபோயிருந்தாய்?"

தலைவன் : "எங்கேபோயிருந்தேன்? வெளியூர்களுக்கு வேடிக்கைப் பார்க்கச் சென்றிருந்தேன்! அவ்வளவுதான்!"

தோழி : "வெளி ஊருக்கா? அல்லது ஊருக்கு வெளியே உள்ள சேரிக்கா?"

தலைவன் : "ஊருக்கு வெளியே பரத்தையர் சேரி அல்லவா இருக்கிறது! அங்கே நான் ஏன் போகப்போகிறேன்?"

தோழி : "ஏன் போகப்போகிறேன் என்று என்னையா கேட்கிருய்? உன்னேடு ஒழியாமல் சுற்றித்திரிந்தானே பாணன் அவனைக் கேட்டுப்பார்! அவன் சொல்லுவானே காரணத்தை!"

தலைவன் : "தோழி! நீ என்னைத் தவருகக் கருதிக்கொண்டாய்போலும்! பாணன் எனக்கு உற்ற நண்பனுக இருந்து ஊருக்கு ஊர் அழைத்துச் சென்று வேடிக்கைகாட்டி என்னை மகிழ்வித்தான்! அவன் வேறு குற்றம் ஏதும் அறியானே!"

தோழி : (ஏளனச் சிரிப்புடன்) "ஆகா!...... அவன் ஒரு குற்றமும் அறியாதவன்... அல்லவா? அவன் பரத்தையர் சேரியில் உன்னை வீட்டுக்கு வீடு அழைத்துச் சென்று ஒவ்வொரு பரத்தையாக வேடிக்கைக்காட்டி உன்னை மகிழ்வித்தான் என்று சொல்லேன்! ஏன் இல்லாததைச் சுற்றி வளைத்துப் பேசுகிருய்?"

தலைவன் : (ஏதும் அறியாதவன்போல்) "நான் பரத்தையர் சேரிக்குப் போனதாக யார் அந்தப் பொய்யை உன்னிடம் கூறினது?"

தோழி : "எனக்கு யாரும் கூறவேண்டாமே! நானே அந்த உண்மையை நேரில் கண்டேனே!"

தலைவன் : (சற்றுத் திடுக்கிட்டுப்போய் ஆனல் தன்னைத்தானே சமாளித்துக்கொண்டு) "நானுக இருக்காதே! நீ வேறு யாரையேனும் நான் என்று எண்ணிக்கொண்டிருக்கிருய்போலும்!"

தோழி : (அழுத்தந்திருத்தமாக) "நான்தான் என் இரு கண்களால் உன்னை அங்குக் கண்ணாரக் கண்டேனே! பாணன் சிறிய யாழை மீட்டிக்கொண்டு உன் பக்கத்திலே வர, நீ பெருமிதத்தோடு பரத்தைச் சேரி

யின் தெருவில் வந்துகொண்டிருந்ததை தையும், உன் மார்பைத் தழுவி உன்னிடம் இன்பம் பெற்ற பரத்தையர் நீ தங்களைவிட்டுத் தெருவோடு போவதையறிந்து, உன்னிடம் கொண்ட அன்பு மிகுதியாலே ஒவ்வொருவரும் உன்னைத் தத்தம் வீட்டிற்குப் பிடித்து இழுத்ததையும், நீ அவர்களை உதறித்தள்ளியதையும், அவர்கள் வெம்மையுற்றுக் கண்ணீர் விட்டுக் கலங்கி அழுததையும், பெரிய சுழற்காற்று வீச, அதன் சுழற்றுதலாலே கொந்தளித்த கடலிலே சென்றுகொண்டிருந்த மரக்கலம் கவிழ்ந்துவிட, அதில் ஏறியிருந்தவர்கள் மிக்கக் கலக்கமுற்றுத் தாமும் ஒருசேரக் கடலில்விழ, அப்படி விழுந்தபலரும் அங்கு மிதந்துவந்த ஒரு பலகையைப் பற்றிக்கொண்டு தாம்தாம் தனித்தனி அதனை எப்படி இழுப்பார்களோ அப்படிப் பரத்தையர் பலரும் உன் கைகளைப் பற்றிக்கொண்டு தங்கள் தங்கள் கருத்தை நிறைவேற்றிக்கொள்ளத் தனித்தனி இழுத்ததையும், நீ அவர்களிடையே அகப்பட்டுக்கொண்டு திண்டாடித் தவித்ததையும் நான் கண்ணாரக் கண்டேனே!" (தலைவன் வாய்பேசாமல், வெட்கத்தால் தலைகுனிந்தவண்ணம் நிலத்தை நோக்கிக்கொண்டு அப்படியே அசைவற்று நிற்கிறான். மீண்டும் தோழி பேசுகிறாள்.) "நான் கண்ணாரக்கண்டு வைத்தும் உன்னை என்ன செய்யமுடியும்? நீயோ ஆடவன்! அப்படி யிருக்க நீ ஏன் பரத்தையர் யாரையும் பார்க்கவில்லை என்று பொய் கூறவேண்டும்?"

தலைவி : (வீட்டினுள்ளே நின்றுகொண்டிருக்கிறவள் தலைவன்பால் இரக்கங்கொண்டு) "ஆடவர் வண்டுபோன்ற பண்புடையவராதலால் அவர் வரும்போது எதிர்தொழுவதும், அவர் போகும்போது பின்னே தொழுவதும் அல்லாமல், அவர் செயலைக் குறித்துப் பெண்டிர் சொல்லுவதற்கு என்ன இருக்கிறது? இதுதான் உலக நியதி ஆகிவிட்டதே! எனவே தலைவனைச் சினந்துகொள்ளாதே! உள்ளே வர வழிவிடு!" (என்று தோழியிடம் தலைவன் காதில் விழும்படி கூறுகிறாள்.)

தலைவன் தன் செயலுக்கு நாணி, இனி அத்தகையத் தவற்றைச் செய்வதில்லை என்ற முடிவுக்கு வந்து திருத்தம் பெற்றவனாகிறான்.

ஃ ஃ ஃ

இது நற்றிணை 30-ஆம்செய்யுளின் தழுவல். இதனை இயற்றியவர் கொற்றனார் என்ற புலவராவார், இவரைச் செல்லூர்க் கொற்றனார் என்றும் செல்லூர்கிழார் மகனார் பெரும்பூதங் கொற்றனார் என்றும் கூறுவர். செல்லூர் என்பது சோழநாட்டில் கடற்கரை அருகிலுள்ள ஒரு ஊராகும். இவர் வணிகமரபினர் என்று சொல்லப்படுகிறது. இவரது பாடல்கள் நற்றிணை, குறுந்தொகை, அகநானூறு ஆகிய நூல்களில் காணக்கிடக்கின்றன.

கண்டனென் மகிழ்ந கண்டெவன் செய்கோ
பாணன் கையது பண்புடைச் சீறியாழ்
யாணர் வண்டின் இம்மென இமிரும்
ஏர்தரு தெருவின் எதிர்ச்சி நோக்கிநின்
மார்புதலைக் கொண்ட மாணிழை மகளிர்
கவலை முற்ற வெய்துவீழ் அரிப்பனி
காலை முற்ற பைதரு காலைக்
கடல்மரம் கவிழ்ந்தெனக் கலங்கி உடன்வீழ்பு
பலர்கொள் பலகை போல
வாங்க வாங்கநின் தூங்(கு) அஞர் நிலையே.

[நற்றிணை—30]

[பொழிப்புரை : மகிழ்ந ! பாணன் கையிடத்ததாகிய பண் அமைந்த சிறிய யாழ் அழகிய வண்டுபோல இம்மென ஒலிக்க நீ எழுந்துவருகின்ற தெருவிலே, நீ வருதலை எதிர்பார்த்து நின் மார்பை முன்பு தம்முடையதாகப் பற்றிக்கொண்டிருந்த மாட்சிமைப்பட்ட இழையை அணிந்த பரத்தையர் பலரும், நீ பிரிந்ததனால் உண்டாகிய கவலை மிகுதலாலே கண்களினின்று வெப்பமாய் வடிகின்ற கண்ணீருடனே, கடிய புயற்காற்று வீசிச் சுழற்றுதலாலே துன்புற்ற காலத்துக் கடலிலே தாம் ஏறியிருக்கும் மரக்கலம் கவிழ்ந்துவிட்டதாக அங்ஙனம் கவிழ்தலும், கலக்கமுற்றுத் தாமும் ஒருசேர வீழ்ந்து அப்படி விழுந்த பலரும் ஆண்டு மிதந்துவந்த ஒரு பலகையைப் பற்றிக் கொண்டு தாம்தாம் தனித்தனி இழுப்பதுபோல நின் கைகளைப் பற்றி அவரவர் தம்தம் கருத்து நிறைவேறுமாறு இழுத்தலாலே, நீ அவர்களிடையே அகப்பட்டு மிக வருந்துகின்ற நிலைமையை யான் கண்கூடாகக் கண்டேன் ; கண்டும் நின்னை யாது செய்ய இயலும்காண்? ஆதலின் நீ யாரையும் அறியேன் என்றது எப்படிப் பொருந்துவதாகும் ?

பாணன் - தலைவனைப் பரத்தையோடு தொடர்புபடுத்துபவன் ; யாணர் - அழகு ; இமிரும் - ஒலிக்கும் ; மாண் - மாட்சிமைபட்ட ; இழை - அணிகலன் ; கவல் - கவலை ; அரிப்பனி - கண்ணீர்த்திவலை ; கடல்மரம் - கட்டுமரம், கப்பல் ; அஞர் - வருந்தும்.]

ஃ ஃ ஃ

ஆடவர் பல பரத்தைப் பெண்டிரோடு கூடி முயங்குதலும், அதனை மனைவிமார்கள் பொறுத்துக்கொண்டு போதலும் ஆன பண்புகள் பண்டைத் தமிழகத்திலும் நிலவியிருந்தனவாகவே தெரியவருகின்றன. ஆடவர் பரத்தை இல்லிற்குச் செல்லுதலையும், பரத்தையரோடு முயங்கி இருத்தலையும் பண்டைத் தமிழ் ஆன்றோரும் சான்றோரும் வெறுக்கவே செய்தனர் எனினும் அத்தகைய பழக்கங்கள் ஒப்புக்கொள்ளப்பட்ட பழக்கங்களாகச் சமுதாயத்தில் இருந்தேவந்திருக்கின்றன.

தலைவன் பரத்தையர் வீட்டுற்குச் செல்வதைத் தலைவியும் தோழியும் வெறுத்தே வந்திருக்கின்றனர் என்பதும் வேறுவழியில்லாமல் தலைவனை ஏற்றுக்கொள்கிறார்கள் என்பதும் இச்செய்யுளால் அறியப்படுகின்றன.

பரத்தையர் சேரியில் தலைவனைப் பலர் பிடித்து இழுப்பதற்குக், கடலில் கப்பலில் இருந்து வீழ்ந்தவர்கள் மரத்துண்டைப் பற்றித் தத்தமக்கு என்று இழுப்பதை உவமையாகக் காட்டியிருப்பது பெரிதும் நயப்பாடு நிறைந்ததாகும்.

புலவர் கடலோரத்தில் வாழ்ந்தவராதலால், கடலில் காணப்படும் நிகழ்ச்சிகளில் மிகவும் ஈடுபாடுடையவர் என்பது மேற்கண்ட உவமையால் தெளியப்பெறும்.

பாணனாக இருப்பவன் யாழ் மீட்டுவதில் வல்லவனாக இருந்து, ஆடவரை மயக்குபவனாக இருப்பான் என்று தெரியவருகிறது.

உலகிலே ஆழமான சுரங்கம்

உலகிலே மிக ஆழமான சுரங்கம் தென் ஆப்பிரிக்காவில் சோகனசுபர்க்கு (Johannesburg) என்னும் இடத்திலுள்ள கிரவுண் தங்கச்சுரங்கமாகும். இது அண்மையில் வெளிவந்துள்ள கணக்குப்படி 9876 அடி ஆழமுள்ளதாகும். உலகிலே மனிதன் நிலத்தைத் தோண்டி இறங்கியுள்ள மிக்க ஆழமான பகுதி இதுதான். இந்தச் சுரங்கம் 1892-ஆம் ஆண்டில் தான் முதன்முதல் தோண்ட ஆரம்பிக்கப்பட்டது. அதிலிருந்து 1951-ஆம் ஆண்டு வரையில் 12,69,91,815 டன்கள் எடையுள்ள (தங்கம் கலந்த) மண் தோண்டி எடுக்கப்பட்டுள்ளது.

உலகிலே இரண்டாவது ஆழமான சுரங்கம் தென்னாட்டிலுள்ள கோலார் தங்கச்சுரங்கமாகும். இது 9757 அடி ஆழமுள்ளது.

உலகிலே மூன்றாவது ஆழமான சுரங்கம் சோகனசுபர்க்கில் உள்ள வேறோர் தங்கச் சுரங்கமாகும். இது 9637 அடி ஆழமுடையது.

அட்டைப்படம்

ரிச்சர்டு ஆர்க்ரைட்

(சௌரிராசன்)

இருநூறு ஆண்டுகளுக்கு முன்பு இங்கிலாந்து நாட்டிலுள்ள போல்டன் நகரம். குறுகிய ஒரு தெருவில் அழுக்கு உடை அணிந்த, மிக ஏழ்மையான நிலையிலுள்ள ஒருவன் ஒரு விளம்பரப் பலகையை ஒரு வீட்டுச் சுவற்றில் தொங்கவிட்டுக்கொண்டிருந்தான்.

"இங்கு ஒரு பென்னிக்கு முடி வெட்டப்படும்"

இந்த விளம்பரத்தைப் பார்த்தவர்களெல்லாம், மற்றவிடங்களில் இரண்டு பென்னிக்கு முடி வெட்டப்படும்பொழுது, இங்கு ஒரு பென்னி என்றிருந்ததால் அந்த முடிதிருத்தச் சாலைக்கே அதிகம் வர ஆரம்பித்தார்கள். அந்த முடிதிருத்தச்சாலையின் உரிமையாளன் தான் ரிச்சர்டு ஆர்க்ரைட்.

ரிச்சர்டு ஆர்க்ரைட் 1732-ம் ஆண்டு டிசம்பர் திங்கள் 23-ம் நாள் பிரெசுடன் (Preston) என்ற நகரில் ஒரு எளிய குடும்பத்தில் பிறந்தான். பதிமூன்று குழந்தைகளில் ஆர்க்ரைட் கடைசியாகப் பிறந்தவனுகும். ஆர்க்ரைட்டுக்கு எவ்விதக் கல்வி வசதிகளும் கிடைக்கவில்லை. தனது பிழைப்புக்கும் ஒரு வழியைத் தேடிக்கொள்ளவேண்டியவனுனன். 1750-ம் ஆண்டில்தான் மேற்கூறிய முடிதிருத்தச்சாலையை ஆரம்பித்ததாகும்.

இளைஞன் ஆர்க்ரைட்டுக்கு நாள்தோறும் வருமானம் குறைவில்லாமல் வளர்ந்துவந்தது. ஏனைய நாவிதர்கள் வருமானத்தை இழக்க நேர்ந்ததால் போட்டி அதிகமாயிற்று. எல்லா முடிதிருத்தச்சாலைகளிலும் ஒரு பென்னிக்கு முடிவெட்டப்படும் என்பதாக அறிவிக்கப்பட்டது.

போட்டியைச் சமாளிக்க ஆர்க்ரைட் அரை பென்னிக்கு முடிவெட்டப்படுமென விளம்பரம் செய்துபார்த்தான். கடையில் கூட்டம் அதிகமிருந்தாலும், விகிதம் மிக குறைந்துவிட்ட காரணத்தினுல் வருமானம் அதிகமாகவில்லை, குறைய ஆரம்பித்தது. ஆர்க்ரைட் முடிதிருத்தும் தொழிலைக் கைவிட்டு வேறு தொழிலை மேற்கொள்ள முடிவுசெய்தான்.

அந்தக்காலத்தில், இங்கிலாந்து நாட்டில் அனேகமாக ஆண்களெல்லாம் தலையில் 'விக்' என்ற 'இடிமயிர்' அணிந்துகொள்வது வழக்கம். முடிதிருத்தச் சாலைகளில் வெட்டி எடுக்கப்படும் தலைமயிரை ஒன்றுதிரட்டி அந்த இடிமயிர்கள் தயாரித்துவந்தார்கள்.

ஆர்க்ரைட் ஊர்ஊராகச் சென்று தலைமயிர் வாங்கி, ஆண்களும் பெண்களும் அணிந்துகொள்ளக்கூடிய 'இடிமயிர்' தயார்செய்யும் தொழிலில் ஈடுபட்டான்.

ஒன்றுதிரட்டப்பட்ட தலைமயிர்களுக்கு புதிய வர்ணம் கொடுத்து மிக அழகான முறையில் ஆர்க்ரைட் தயார்செய்த 'இடிமயிர்'களுக்கு நல்ல பெயர் ஏற்பட்டது. வருமானம் அதிகமாயிற்று; ஆர்க்ரைட் கையில் கொஞ்சம் பொருளும் சேர்ந்தது. போல்டன் நகரில் நாகரீகம்வாய்ந்த பகுதியில் இடம்பிடித்து ஆர்க்ரைட், தன் தொழிலை வளர்க்க ஆரம்பித்தான்.

தலைமயிர் திரட்டுவதற்காக ஆர்க்ரைட் சிறுசிறு, கிராமங்களுக்கும், நகரங்களுக்கும் பிரயாணம் செய்தான். போகும் இடங்களிலெல்லாம் என்ன என்ன தொழில் நடக்கிறது என்றும், எந்தத் தொழிலில் அதிக வருமானம் கிடைக்கிறது என்பதையும் ஆர்க்ரைட் நுணுக்கமாகக் கவனிப்பது வழக்கம்.

ஒரு சமயம் ஆர்க்ரைட் 'லங்காஷயர்' என்ற ஊருக்குச் சென்றிருந்தான். அக்காலத்தில் லங்காஷயர் ஒரு சிறு கிராமமாக இருந்தது. எல்லா குடிசைகளிலும் நெசவுத்தொழில் நடந்துகொண்டிருந்தது. ஆண்களெல்லாம் கைத்தறிகளில் துணி நெய்துகொண்டிருந்தார்கள். பெரும்பாலும் பெண்கள் பஞ்சிலிருந்து நூல் நூற்றுக்கொண்டிருந்தார்கள். அடிக்கடி ஆர்க்ரைட் நூல் நூற்பதையும் துணி நெய்வதையும் நுணுக்கமாகக் கவனித்து வேடிக்கைபார்த்துவந்தான். நூல் நூற்கும் பொறிகளெல்லாம் ஓய்வில்லாமல் தொடர்ந்து வேலைசெய்துகொண்டிருப்பதை

யும், தறிகளில் பெரும்பகுதி வேலை செய்யாமல் இருப்பதையும் ஆர்க்ரைட் கவனித்தான்.

ஒரு நெசவாளியை அணுகி ஆர்க்ரைட் "பெரும்பகுதித் தறிகள் வேலை செய்யாமல் தூங்கிக்கொண்டிருக்கக் காரணம் என்ன?" என்று கேட்டான்.

"நூல் நூற்பது வேகமாக செய்யக்கூடியது அல்ல. நூல் நூற்பது மெதுவாகத்தான் நடக்கிறது. ஆனால் தறியில் வேகமாக நெய்ய முடியும். தறிகள் நெய்யும் வேகத்திற்கு நூல் நூற்றுக்கொடுக்கமுடியாத காரணத்தால், பல தறிகள் வேலை செய்யமுடியாமல் வாளாக இருக்கின்றன" என்றான் அந்த நெசவாளி.

"பின்னர் வேகமாக நூல் நூற்பதற்கு ஏதேனும் வகை செய்யவேண்டும்" என்றான் ஆர்க்ரைட்.

'வேகமாக நூல் நூற்பதா' என்று சொல்லி தலையை அசைத்து நகைத்தான் நெசவாளி. வேடிக்கை பார்க்க வந்தவனுக்கு எழுந்த யோசனையைக் கேட்டு ஆச்சரியப்பட்டான் அப்பொழுது நெசவாளி. கல்வி அறிவோ தொழில் பயிற்சியோ கொஞ்சமும் இல்லாத ஆர்க்ரைட்டின் மனதில் உதித்த எண்ணம் பின்னால் நூல் நூற்கும் பொறி உண்டாவதற்கு காரணமாக அமையும் என்பதை அந்த நெசவாளி எப்படி எதிர்பார்த்திருக்கமுடியும்.

ஆர்க்கரைட் ஊருக்குத் திரும்பினான். ஆனால் அவன் மனதில் நூல் நூற்பதற்கு புதியதொரு பொறியைக் கண்டுபிடிக்கவேண்டும் என்ற எண்ணம் அகலாமல் இடம் பெற்றிருந்தது.

வெகுநாள் ஆராய்ந்து ஆர்க்ரைட் ஒரு பொறி ஒன்றை செய்தான். ஆனால் தான் எண்ணிய வண்ணம் பொறியை அமைக்க ஆர்க்ரைட்டால் இயலவில்லை.

கடிகாரங்கள் சீர்செய்யும் தொழில் செய்து வந்த நண்பன் ஒருவனை அணுகி ஆர்க்ரைட், "நுணுக்கமான இயந்திர உறுப்புகளை பொருத்தி அமைப்பதில் நீ பலகாலம் பயிற்சி பெற்றிருக்கிறாய். நான் ஒரு புது இயந்திரம் ஒன்று செய்து அமைக்க முயற்சித்துக் கொண்டிருக்கிறேன். நீ வந்து என்னுடன் வேலைசெய்து உதவவேண்டும்" என்றான்.

சரி என்று ஒப்புக்கொண்டான் கே என்ற அந்த கடிகார வேலைசெய்பவன். இவனும் ஆர்க்ரைட்டைப்போல் புதியன செய்வதில் ஆர்வமுடைய மனப்பான்மை உள்ளவன். அதுமுதல் ஓய்வு நேரம்பொழுதெல்லாம் கேயும் ஆர்க்ரைட்டும் சேர்ந்து ஒவ்வொரு மாதிரியாக பலவிதப் பொறிகள் செய்து அமைத்துப் பார்த்தார்கள். ஒன்றைவிட மற்றொரு பொறியில் அமைப்பில் கொஞ்சம் கொஞ்சமாக முன்னேற்றம் காணப்பட்டதே தவிர ஆர்க்ரைட் எதிர்பார்த்தபடி அவ்வளவு [illegible] பொறி அமைத்துப் பலன் காண முடியவில்லை. ஆனால் மேற்கொண்ட முயற்சியை இருவரும் கைவிடுவதாக இல்லை. இத்தகைய ஆராய்ச்சியில் அதிகம் கவனம் செலுத்திவந்த காரணத்தால் சொந்தத் தொழில் இருவருக்கும் சரிய ஆரம்பித்தது. ஆர்க்ரைட்டுக்கு வருவாய் மிகவும் குறைந்துவிட்டது.

"ரிச்சர்டு! போதும் நிறுத்து. முடிதிருத்தும் தொழிலை மறுமுறை ஆரம்பித்தாகிலும் ஏதாவது பொருள் சம்பாதிக்க முயற்சிசெய். பொருள் இல்லாமல் நாம் ஒன்றும் செய்யமுடியாது" என்று ஆர்க்ரைட்டின் மனைவி மன்றாடினாள்.

ஆர்க்ரைட் அதை ஒன்றும் கவனிக்கவில்லை. அவன் மனைவி மீண்டும் மீண்டும் சொல்லிப் பார்த்தாள் பயனில்லை. ஒரு நாள் ஆத்திரமடைந்து ஆர்க்ரைட் செய்துவைத்திருந்த மரப் பொறி ஒன்றை உடைத்து நொறுக்கி அடுப்பெறித்துவிட்டாள். வெகு நாள் முயற்சியினால் உருவாகிவந்த மாதிரிப் பொறி தொலைந்தது.

ஆர்க்ரைட் கொஞ்சமும் கோபங்கொள்ளவில்லை. மிகப் பொறுமையுள்ளவனாய், "மறுமுறை அதைச் செய்துமுடிக்கவேண்டும்" என்று சொல்லிக்கொண்டு நண்பனை அழைத்துவந்து சிலநாட்களில் மறுமுறை மரத்தினால் அந்தப் பொறியை செய்துகொண்டான்.

வருமானம் குறைந்துவிட, வறுமை அதிகமாகி, அழுக்கடைந்த கந்தையைக் கட்டிக்கொண்டு சாப்பிடக்கூடப் போதிய ஆகாரம் கிடைக்க வழியில்லாமல் பட்டினிகிடந்து, ஆர்க்ரைட், கொஞ்சம் தளராத முயற்சியுடன் பொறி அமைப்பிலேயே கண்ணுங்கருத்துமாக இருந்துவந்தான். முடிவில் ஒருநாள் ஆர்க்ரைட் எதிர்பார்த்தவிதமாக பொறி கையால் நூற்பதைவிட கொஞ்சம் வேகமாக நூல் நூற்கும் நிலையை அடைந்தது. ஆர்க்ரைட்டின் பலநாள் முயற்சி வெற்றிபெற்றது.

போல்டன் நகரில் ஒரு மூலையிலிருந்த பாழடைந்த வீட்டை வாடகைக்குப் பேசி, கேயும் ஆர்க்ரைட்டும் புதிய பொறியை அங்கு கொண்டுபோய் வைத்துக்கொண்டு மேலும் பொறியை நல்ல முறையில் இயங்கவல்லதாக ஆக்க முயற்சி செய்தனர்.

“இனி நாம் யாருக்கும் தெரியாமல் நமது பொறியினைச் செய்யவேண்டும். புதியபொறியினால் கேடு சூழுமென்று எல்லோரும் பயப்படுகிறார்கள். ஆகவே அவர்கள் பார்த்தால் நமது முயற்சி பாழாகக்கூடும்” என்று சொல்லிக்கொண்டான் ஆர்க்ரைட்.

பாழடைந்த வீட்டுக்குள் இரு நண்பர்களும் யாருக்கும் தெரியாமல் இரவு நேரங்களில் தங்கள் முயற்சியில் ஈடுபட்டு வந்தார்கள். இரவு நேரங்களில், நடுநிசியில், பாழடைந்த வீட்டுக்குள் மரச்சக்கரங்கள் சுற்றுவதால் மூளும் ஓசை அக்கம்பக்கத்தில் உள்ளவர்களுக்கு விந்தையாகத் தோன்றிப் பின் அதிக அச்சத்தையும் ஊட்டியது. வயதான கிழவிகள் கதை கட்ட ஆரம்பித்தார்கள். இரவில் நடுநிசியில் பாழடைந்த வீட்டுக்குள் ‘சைத்தான்’ தனது பரிவாரங்களுடன் வந்து இசை வாத்தியங்களை முழங்குவதாகவும், ஊரில் திரியும் கெட்ட ஆவிகள் எல்லாம் ஒன்றுகூடி கூத்தாடுவதாகவும் எங்கும் பேசப்பட்டது.

ஆனல் ஆர்க்ரைட் பிறருடைய எச்சரிக்கையையும் பயமுறுத்தல்களையும் கொஞ்சமும் லட்சியம் செய்யாமல் முயற்சி செய்து தான் மனதில் திட்டமிட்டவகையில் மரத்தினல் பொறி ஒன்றைச் செய்து முடித்துவிட்டான். ஒரு உலைக்கூடத்திற்கு அந்த மரப்பொறியை அனுப்பி அதேமாதிரி இரும்பினல் பொறி செய்யவேண்டியதுதான் பாக்கியாகவிருந்தது.

ஆர்க்ரைட்டும் அவனது நண்பர்களும், “லங்காஷயரில்” முன்னைவிட இருபது பங்கு வேகமாக நூல் நூற்கும் நாள் வரப்போகிறது, இனி நமக்கு அதிக துணிகள் நூற்று நெய்ய பொறி கிடைத்துவிட்டது” என்று சொல்லிப் பெருமைப்பட்டுக்கொண்டார்கள்.

இதைக் கேள்விப்பட்ட பொதுமக்கள் பயப்பட ஆரம்பித்தார்கள். நகரங்களிலுள்ள தொழிலாளிகள் புதிய பொறிகள் வந்தால் தங்களுக்கு வேலையில்லாது போய்விடும் என்று பயந்து புதிய பொறிகள் அமைக்கப்படாமல் தடுக்கவேண்டும் என்று முயற்சித்தார்கள்.

ஆர்க்ரைட்டின் புதிய பொறிக்கு ஆபத்து நெருங்கியது மரப்பொறியை எடுத்துக்கொண்டு ஆர்க்ரைட் போல்டன் நகரைவிட்டு நாட்டிங்காம் என்ற நகருக்குச் சென்று தங்கினன். அங்கும் அதிகநாள் தங்கி இருக்க இயலாமல் கிராம்போர்டு என்றவிடத்தில் ஆர்க் [illegible] ரைட் சென்று தங்கினன்; ஆர்க்ரைட் கண்டுபிடித்தப் பொறி வேகமாகவும் கையால் நூற்ற நூல்களைவிட வலுவுள்ளதாயும் நூல் நூற்கும் தகுதி உடையதாக இருந்தமையால் நெசவாளிகள் புதிய பொறியின் உயர்வை உணர ஆரம்பித்தார்கள். பலர் உதவிசெய்யவும் முன்வந்தார்கள். ஆர்க்ரைட் பலவிடங்களில் உலைக்கூடங்கள் அமைத்து பல இரும்பு நூல் நூற்கும பொறிகளைச் செய்தான். ஆர்க்ரைட் பெரிய பணக்காரனுகவும் தொழில் நிபுணனுகவும் ஆகிவிட்டான். ஒரு தொழிற்சாலையிலிருந்து மற்றொரு தொழிற்சாலைக்கு துரிதமாகப் போய் பொறி உற்பத்தியைக் கண்காணிக்க, ஆர்க்ரைட் நான்கு குதிரைகள் பூட்டிய வண்டியை உபயோகித்தானும்!

லங்காஷயரில் ஆர்க்ரைட் கண்டுபிடித்த பொறிகள் இயங்கி நூல்நூற்கும் தொழில் நல்ல முறையில் நடக்க ஆரம்பித்தது. ரிச்சர்டு ஆர்க்ரைட் இங்கிலாந்திலுள்ள முக்கியமானவர்களில் ஒருவராகக் கருதப்பட்டார்.

ஆங்கில நாட்டு அரசன் ரிச்சர்டு ஆர்க்ரைட்டுக்கு “சர்” பட்டம் வழங்கிக் கௌரவித்தான். அக்காலத்தில் போர்க்களத்தில் தீரமாகப் போர்செய்து மீண்ட தளபதிகளுக்குத்தான் “சர்” பட்டம் கொடுத்து கௌரவிக்கப்படுவது வழக்கம்.

ஆனல் தொழில் வளர்ச்சிக்காக அரும்பாடுபட்டுப் புதிய பொறியைக் கண்டுபிடித்த ஆர்க்ரைட்டுக்கு முதன்முதலாக “சர்” பட்டம் கொடுக்கப்பட்டது.

சர். ரிச்சர்டு ஆர்க்ரைட் 1792-ம் ஆண்டு ஆகஸ்டுத் திங்கள் 3-ம் நாள் கிராம்போர்டு என்னும் நகரத்தில் இறந்தார். அவர் கண்டுபிடித்தப் பொறியின் வகையையும் அடிப்படையையும் கொண்டு வளர்ந்த இயந்திரங்கள்தான் தற்சமயம் உலகில் பலவிடங்களிலுள்ள பஞ்சாலைகளில் இயங்கிவருகிறது.

சிறுகதை

காணி நிலம்

[செல்வன்]

கோடை வெய்யில் கொளுத்திக்கொண்டிருந்தது. வயல் பக்கம் சென்று புஞ்சைக்குத் தண்ணீர் பாய்கிறதா என்று பார்த்துவிட்டு, அப்படியே கிராமச் சாவடிப்பக்கம் சென்று அன்றைக்குச் சேதி என்ன என்று தெரிந்துகொண்டு அப்பொழுதுதான் வீட்டிற்குள் நுழைந்தார் மணியக்காரர் மாணிக்கவாசகம் பிள்ளை. மணி 12 அல்லது 12-30 இருக்கும். கிராமத்திற்கு வாரம் இரு முறை வரும் தபால்காரன் நாலைந்து காகிதங்களை மணியக்காரரிடம் கொடுத்துவிட்டு, கிராமப் பொதுக் கிணற்றில் தண்ணீர் எடுப்பது பற்றி நடந்த சண்டையின் முடிவைக் கேட்டான். தாகம் தணிக்கக் கொஞ்சம் மோர் சாப்பிட்டுவிட்டுச் சென்றுவிட்டான். அவன் சென்ற திசையையே சிறிது நேரம் பார்த்துக்கொண்டிருந்த பட்டா மணியம், காற்றில் சலசலத்த காகிதங்கள் பக்கம் தன் பார்வையைத் திருப்பினார். நாலு பக்கமும் மஞ்சள் பூசியிருந்த ஒரு கார்டைப் பார்த்தார். மயில்வாகனம் பிள்ளை குமாரத்தி "காதணி விழா" அழைப்பிதழ் அது. அடுத்த கவர் பட்டணத்தில் படித்துக்கொண்டிருக்கும் மூத்த பையன் முருகேசனிடமிருந்து, பணம் அனுப்பச் சொல்லி வந்த கடிதம். மூன்றாவது தபாலில் அரசாங்க முத்திரை இருந்தது. "எந்தக் கலெக்டர் காம்ப் போட்டானோ அல்லது எந்த தாசில்தார் வந்து உயிர வாங்கப் போறானோ" என்று முணுமுணுத்துக்கொண்டே தபாலைப் பிரித்தார் மணியக்காரர்.

ஐந்தாண்டுத் திட்டத்தின்படி கிராமங்களுக்குச் சுகாதார, மின்சார, போக்குவரத்து வசதிகள், கிராம அபிவிருத்தி செய்துதர அரசாங்கத்தால் தோற்றுவிக்கப்பட்ட சமூக நலத் திட்ட அதிகாரி அனந்தாச்சாரியிடமிருந்து வந்த கடிதம். வருகின்ற வியாழனன்று மள்ளாங்கிணற்றுக்கு வருவதாகவும், அது சமயம் ஊர்ப் பொதுமக்களைக் கூட்டிக் கிராமத்திற்கு அவசியத் தேவையாக இருக்கும் சில பல திட்டங்கள் பற்றிக் கலந்து ஆலோசிக்க விரும்புவதாகவும் எழுதியிருந்தார்.

மணியக்காரர் மாணிக்க வாசகம் இன்று நேற்று அல்ல, அவர்கள் பரம்பரையே மணியம் பரம்பரைதான். சாதாரண தாசில்தார் உருட்டல் மிரட்டல்களுக்கு எல்லாம் பயப்பட மாட்டார். மள்ளாங்கிணற்றிலேயே நல்ல செல்வாக்கும் கூட. எவனாவது அவரைப் பற்றி 'ஒரு மாதிரி' பேசினான் என்று அசைப்பிலே தெரிந்தால்கூடப் போதும், தண்டத் தீர்வை, கண்மாய் வரி அது இது என்று போட்டு உயிரை வாங்கிவிடுவார். அதற்குப் பயந்து அவரிடம் யாரும் வெளிப்படையாக எதிர்த்துப் பேசமாட்டார்கள். இந்த ஐந்தாண்டுத் திட்டத்தைப் பற்றி ஏதோ கொஞ்சம் படித்தும், பல பேர் சொல்லக் கேட்டும் மணியம் தெரிந்து வைத்திருந்தார். முனிசீப் முனீஸ்வரய்யரைக் கலந்துகொண்டு அதிகாரி வருவதற்கு ஏற்பாடு செய்ய எண்ணி அவரைக் காணச் சென்றார். மணியமும் முனிசீப்பும் இல்லாத தேர், திருவிழா, கல்யாணம், எழவு ஒன்றும் இருக்காது, மள்ளாங்கிணறு கிராமத்தில். ஊர்ப் பெரிய மனிதர்களில் முதல்வர்களாக வைத்து எண்ணப்பட்டனர் இந்த இரட்டையர்கள். இவர்களிடம் உள்ள மதிப்பும், மரியாதையும் அல்ல அதற்குக் காரணம். ஏதாவது சில்லரைத் தொல்லைகள் கொடுத்துக் கொண்டே இருப்பார்கள் என்ற பயம்தான். இவர்கள் இருவரும் சேர்ந்து செய்யும் அக்ரமத்திற்கு அளவேயில்லை. புறம்போக்கு நிலத்தை எல்லாம் தங்களது என்று அளந்து, அனுபவ பாத்யதை கொண்டாடுவார்கள். ஆனால் மற்றவர்கள் அவ்விதம் செய்தால் தண்டத் தீர்வை போட்டு, விளைவுக்கு மேல் கால் பங்கு தீர்வை சேர்த்தே வசூலிப்பார்கள்.

மணியம் முனிசீப்பைப் பார்த்து "என்ன சாமி! சேதி தெரியுமா? நம்ம ஊருக்கு வர்ர வியாழக்கிழமை சமூக நலத்திட்ட அதிகாரி வர்றாராம். தபால் வந்திருக்கு" என்றார்.

"ஆமாம்! பிள்ளைவாள்! நேக்குக்கூடத் தபால் வந்திருக்கு. வர்ரவர்கூட எங்க அத்திம்

பேர் பட்டணத்திலே பாங்கிலே இருக்கிருரோன்னு அவாளுக்கு ரொம்ப வேண்டியவாளாம். கச்சேரியிலே மூந்தாநாள் அவாளேப் பார்த்தேன்—அவாதான் சொன்னு. என்னமோ! பகவத் கிருபை! ஸ்ரீ ராமச்சந்திரப் பிரபு மாதிரி அனந்தாச்சாரி அதிகாரியா வர்ரூர். ஏதோ நம்ம நல்ல காலம். இந்த வருஷத்திலாவது நம்ம அத்தியடி நிலத்துக்கு ஒரு பெரிய கிணறு எடுத்துரலாம்னு பார்க்கிறேன்".

"அதென்ன சாமி! அத்தியடி நிலத்துக்குக் கிணறு வெட்டுறதுக்கும் அனந்தாச்சாரி அதிகாரியா வர்றதுக்கும் என்ன சம்மந்தம். ரொம்ப வேடிக்கையாயிருக்கே!"

இதைக் கேட்டதும் அய்யர் வாய்விட்டுச் சிரித்தார். மணியக்காரருக்குக் கொஞ்சம் கோபம். "என்ன சாமி! ஒன்னு கெடக்க ஒன்னு பேசுறீங்க. கேட்டா ஹ...ஹான்னு சிரிக்கிறீங்க" என்ருர்.

"நீர் ஒரு அப்பாவி மனுஷனய்யா! ஏன் ஓய்! உமக்கு இந்தத் திட்டத்தைப்பற்றி ஏதாச்சும் தெரியுமா?"

"அவ்வளவாத் தெரியாது சாமி! என்னமோ பள்ளிக்கூடம் கட்டுவாங்க, ஆசுபத்திரி வைக்கிருங்க, அப்படி இப்படின்னு கேள்விப்பட்டேன் அவ்வளவுதான்."

"ஹிம்....அதுதான் நீர் முழிக்கிறீர். இதெல்லாம் கிராமப் பணத்திலே இருந்து கொஞ்சம் பங்கு கொடுத்தாத்தான், மீதிப் பணம் சர்க்காரில் போட்டுச் செய்வாங்க. இது போக, கிணறு வெட்ட, உரஉப்பு, நல்ல விதை இதெல்லாம் வாங்கப் பணம் கடன் கொடுக்கிருவோய்."

"என்ன சாமி! இனமா ஒன்னும் தரலியே! கடன் தானே கொடுக்கிருங்க."

மணியக்காரரின் இந்தப் பதில் முனீஸ்வரய்யரின் சிந்தனையைத் தூண்டியது. ஒரு சிட்டிகைப் பொடியை எடுத்து உறிஞ்சினர். பொடியை உறிஞ்சிவிட்டு இடுப்பில் இருந்த கலர் கைக்குட்டையை எடுத்து மூக்கைத் துடைத்துக் கொண்டு, தொண்டையைக் கனேத்தவாறே ஆரம்பித்தார்.

"ஏதோ, என் பண முடை இப்போதைக்குத் தீரும் அல்லவா, அதனல் தான் சொன்னேன். வேறு ஒன்றுமில்லே" என்று மழுப்பினர்.

ஏதோ பெரும் வெற்றியை அடைந்தது போல மணியம் மாணிக்கவாசகம், "அது தானே சாமி! கேட்டேன். சர்க்கார்ல என்ன சும்மாவா கொடுப்பாங்க. அவன் தான் பணம் பத்தலேன்னு சொல்லி அந்த வரி இந்த வரின்னு புதிசு புதிசா வரிப் போட்ருனே" என்ருர். இதன் பிறகு வியாழக்கிழமை அதிகாரி வருவதற்கு ஏற்பாடுகள் செய்ய திட்டம் செய்துவிட்டு தோட்டிக்கு ஆளனுப்பி அவனுக்கு விபரத்தைக் கூறி தமுக்குப் போடச் சொல்லிவிட்டு, மணியக்காரர் வீட்டிற்குத் திரும்பினர்.

மள்ளாங்கிணற்றுக் கிராமத்தில் படித்தவர்கள் மிகக் குறைவு. அவர்களிலும் பத்திரிக்கை படிப்பவர்கள் மிகமிகக் குறைவு. ஏதோ பாட்டன், பூட்டன் தேடிவைத்த காணியை வைத்துக்கொண்டு, மண்ணைக் கிண்டி வயிறு வளர்ப்பவர்கள்தான் அந்தக் கிராமவாசிகள். மணியம் மாணிக்கவாசகம், முனிசீப் முனீஸ்வரய்யர், பழைய பண்ணை பரமசிவம் பிள்ளை இந்த மூன்று குடும்பங்களில் தான் கொஞ்சம் எழுதப் படிக்கத் தெரிந்தவர்கள் உண்டு. ஆகையால் வியாழனன்று சமூக நலத்திட்ட அதிகாரி வருகிருர் என்ற தமுக்குச் சேதியைக் கேட்டதும கிராமம் முழுவதும் இது பற்றிய பேச்சாகவே இருந்தது.

வியாழக்கிழமை மாலே 5 மணி இருக்கும். செம்மண் தூசியைக் கிளப்பிக்கொண்டு கிராமத்துப் பாதையில் மேடுபள்ளங்களில் இறங்கி ஏறி ஒரு ஜீப்கார் வந்து நின்றது. கிராமத்திற்குள் நுழையுமிடத்தில் அம்பலக்கல்லில் வீற்றிருந்த உள்ளூர்ப்பிரமுகர்கள் மாலே மரியாதையுடன் அதிகாரியை வரவேற்றனர். தனக்களிக்கப்பட்ட இந்த விசேஷ வரவேற்பிற்காக கிராமத்து மக்களேயும், குறிப்பாக முனிசீப் முனீஸ்வரய்யரையும் பாராட்டினர் சமூக நல அதிகாரி அனந்தாச்சாரியார். அதன்பிறகு கிராமச்சாவடியில் நடந்த கூட்டத்தில் கிராமத்திற்கு ஒரு ஆசுபத்திரியும் பள்ளிக்கூடத்திற்கு கட்டிடம் ஒன்றும் கட்ட வேண்டும் என்று தீர்மானிக்கப்பட்டது. ஆசுபத்திரி, பள்ளிக்கூடம் இவைகளுக்கு கட்டிடம் கட்ட இடமும், பாதிப் பணமும் கிராமத்திலிருந்து கொடுக்கவேண்டும் என்று அதிகாரி கூறினர். கிராமத்தில் சிலர் அதற்கு இசையவில்லே. மற்றும் சிலர் "அதற்கு

என்ன் கிராமப் பொதுப்பணத்தில் இருந்து, கொடுத்தால் போகிறது'' என்றனர். "இடம் கூட பொதுக்களத்தில் ஒரு ஓரத்தில் கட்டச் சொல்லிவிடலாம்'' என்றனர் பலர். இந்த நிலையில் கைக்கெடியாரத்தைப் பார்த்த அனந்தாச்சாரி "சரி. சரி. நேக்கு இன்னும் இரண்டு வில்லேஜ் போகவேண்டி இருக்கு, டயம் ஆயிடுத்து'' என்று சொல்லிக்கொண்டே ஜீப்பில் முன்பக்கத்தில் ஏறி உட்கார்ந்தார். ஜீப்பில் இருந்தவாறே முனிசீப் முனீஸ்வரய்யரைக் கூப்பிட்டு "எல்லாம் சரி பார்த்து ஒரு முடிவுபண்ணி நேக்கு தபால் எழுதுங்கோ'' என்று கூறிவிட்டுக் கிளம்பிவிட்டார். அவர் சென்றபிறகு கிராமச்சாவடியில் எல்லோரும் ஒன்றுகக் கூடினர்.

கிராமப் பொதுப்பணம் ஏழாயிரத்திச் சொச்சம் முழுவதும் முனிசீப் முனீஸ்வரய்யரிடம், மகள் பத்மாவின் பட்டுச்சேலைகளாகவும் மனைவி மரகதம்மாளின் கழுத்துச் செயினுகவும் முடங்கிக்கிடந்தது. இதுதவிர ஊரில் பொதுப் பணத்தைப்பற்றி அடிக்கடி பேசும் கலகக்காரர்கள் சிலரிடம் கைமாத்து, கடன் இப்படியாகவும் கொடுத்து வைத்திருந்தார். இது பற்றி வேறு யாரும் கணக்குக்கேட்கவோ, பணம் எங்கே என்று கேட்கவோ துணிவதில்லை, அய்யரிடம் உள்ள பயம் காரணமாக. பேசத்துணிந்த சிலரோ அய்யரிடம் கடன், கைமாத்து என்று ரொக்கம் வாங்கியிருக்கிறர்கள். பொதுப்பணத்தைப் பற்றிக் கேட்டால் தங்கள் குட்டு வெளிப்பட்டுவிடும் என்று அவர்கள் வாயடைத்துப்போயிருந்தனர். கிராமப் பொதுப்பணத்தைப்பற்றிக் கேட்க வாய்ப்பை எதிர்பார்த்திருந்த ஒருசிலருள் கொஞ்சம் விபரம்தெரிந்தவன்தான் பழைய பண்ணைப் பரமசிவத்தின் மகன் பார்த்திபன். கல்லூரிப் படிப்பை முடித்துவிட்டு வேலை தேடித்திரியும் எண்ணற்ற 'இலட்சியவாதி'களுள் பார்த்திபனும் ஒருவன். அவன் வேலைக்கு எழுதிப்போடாத அலுவலகங்களே இல்லை என்று துணிந்து கூறலாம். ஒவ்வொன்றிலிருந்தும் 'வயது அதிகம்', 'அனுபவம் இல்லை', 'வயதுகுறைவு' இம்மாதிரி ஏதாவது காரணம் காட்டி 'வேலை இல்லை' என்ற ஒரே முடிவான பதில்தான் வந்தது. வேலை தேடிப் பட்டணத்தில் பல இடங்களிலும் படையெடுத்துத் தோல்வியுற்று ஓய்வு நாடி சொந்தக் கிராமத்திற்கு வந்தான். வந்த இடத்தில் இந்த வேலை—ஆம். சம்பளமில்லாதவேலை—கிடைத்தது. எதிர்பார்த்திருந்த வாய்ப்பும் வந்தது. கிராமத்தில் தனக்குவேண்டிய நாலைந்து பேர்களிடம் விபரம்கூறி கிராமக் கூட்டத்தில் முன்சீப் முனீஸ்வரய்யரிடம் பொதுப்பணம் சம்பந்தமாகத் தான் கேட்பதற்கு உதவி செய்யும்படியும் கேட்டுக்கொண்டான்.

சாவடியில் முன்சீப், மணியக்காரர் இன்னும் சில ஊர்ப் பெரியமனிதர்கள் எல்லாம் மேடை மீது வீற்றிருந்தனர். கூட்டத்தின் நடுவே பார்த்திபன் எழுந்தான். முன்சீப் முகத்தில் கொஞ்சம் வியர்வை தென்பட்டது. சுற்றுப்புறம் அவ்வளவு புழுக்கமாகக்கூட இல்லை. அவரும் வேப்பமரத்தடியில் தான் மேடையின் மீது வீற்றிருந்தார். பார்த்திபனைப் பார்த்ததும் அவர்முகம் குப்பென வியர்த்தது. பயத்தை வெளிக்குக் காட்டிக்கொள்ளாமல் "உஸ்...சத்தம், யாரும் பேசக்கூடாது. நம்ம பையன் பார்த்திபன் ஏதோ சொல்லுன். நன்னு கேளுங்க'' என்ருர். அவர் குரலில் இருந்த நடுக்கத்தை யாரும் கவனிக்கவில்லை.

"ஊர்ப் பொதுமக்களே! பெரியோர்களே! சமூக நலத்திட்ட அதிகாரி சொன்னதுபோல் நாடு நமதாகிவிட்டது. நம் சர்க்கார் அறியாமை இருளும், பழமைப் பாசியும் மண்டிக்கிடக்கும் கிராமங்களைச் சீர்திருத்தும் பணியில் ஈடுபட்டிருக்கிறது. இந்த வாய்ப்பை நாம் நன்றுகப் பயன்படுத்திக்கொள்ளவேண்டும். நம் கிராமத்திற்கு முதலாவதும், முக்கியமானதுமாக ஒரு மருத்துவ விடுதி ஒன்றும், ஆரம்பப்பள்ளியை உயர்தரப்பள்ளியாக்கி அதற்கு ஒரு கட்டிடமும் கட்டியாக வேண்டும். இதற்கு செலவாகும் மொத்தப்பணத்தில் பாதி சர்க்காரிலிருந்து கிடைக்கும். மீதமிருக்கும் பணத்தை நாம்தான் கொடுக்கவேண்டும். நம் கிராமப் பொதுப்பணம் இதுவரை மொத்தம் ஏழாயிரத்துச்சொச்சம் முனிசீப் முனீசுவரய்யர் அவர்களிடமிருக்கிறது. அந்தப் பணத்திலிருந்து பள்ளிக்கட்டிடநிதிக்கு, ஐயாயிரமும், மருத்துவவிடுதிக்கு இரண்டாயிரத்தி ஐந்நூறும் கொடுக்கலாம். இதுபற்றி நாம் ஒரு முடிவிற்கு வந்தால்தான் சமூகநல அதிகாரிக்கு எழுதி நடக்கவேண்டிய வேலைகளைக் கவனிக்க இயலும். ஆகையால் முனிசீப் அவர்கள் இதற்கு ஒப்புதல் தரவேண்டுகிறேன்'' என்று கூறி தன் குட்டிப்பிரசங்கத்தை நிறுத்திக் கொண்டான் பார்த்திபன். எல்லோரும் 'அதுதான்சரி' என்று ஆமோதித்தனர். தன்னைச் சுற்றி ஒருவலை பின்னப்படுவதை உணர்ந்தார் முனிசீப். "அதற்கென்ன, நன்னு செய்யலாம். முதல்ல கிராமக்கணக்கெல்லாம் இன்னும் இரண்டுநாளில் ஒழுங்குபண்

ணிட்டு, பிறகு யோசிச்சுக்குவோம்" என்று கூறித் தற்காலிகமாக நிலைமையைச் சமாளித்தார். கூட்டத்தைக் கலைத்துவிட்டு முனிசீப் வீட்டிற்குவந்தார்.

மறுநாள் காலை தன்னிடம் கைமாத்து வாங்கிய ஏகாம்பரத்திற்கு ஆள் அனுப்பினார். அவன் வந்ததும் முன்சீப் பேச ஆரம்பித்தார்.

"என்னடா ஏகாம்பரம் கேட்டயோன்னு, பய பேசினதை. பொதுப் பணத்தில் இருந்துல்ல பணம் கொடுக்கணுங்கிறான். பரமசிவம் பய, துடியான்னு இருக்கான். நன்னாப் பேசுறானே."

"இம்—கெடக்குது சாமி, விட்டுத்தள்ளுங்க. ஆமா சாமி, இப்ப பணத்துக்கு எங்கசாமி போறது? நின்ன நிலையில ஐந்நூறு எடுன்னா நான் என்னசாமி பண்ணுவேன்."

"நான் என்னடா பண்ணுவேன்? நாளைக்குப் பணத்தைக் கொண்டான்னு என்னைத் தானடா கேட்பா?"

"எனக்கு ஒன்னும் புரியல்ல சாமி! நீங்க தான் இதுக்கு ஒரு வழி சொல்லனும்."

முன்சீப், "ஏதுடா இது வம்பாப் போச்சு" என்று முணுமுணுத்துக்கொண்டே மண்டையைச் சொரிந்துகொண்டார். கட்டிலிலிருந்து எழுந்து குறுக்கும் நெடுக்குமாக கொஞ்சநேரம் உலாவினார். பிறகு ஏகாம்பரத்தைப் பார்த்து, "நீ வேற ஒன்னும் செய்ய வேண்டாம், நோக்கு வேண்டியவனா பத்து ஆளைத் தயார்ப்பண்ணி அடுத்த கூட்டத்தில் பொதுப் பணத்தில் இருந்து கால் காசுகூட எடுக்கக் கூடாது, பஞ்சம் பட்டினி ஏதாவது வந்தா வேணும்" என்று மாத்திரம் சொல்லு, பிறகு நான் பார்த்துக்கொள்கிறேன் என்றார். இதைப்போலவே தன்னிடம் பணம் வாங்கிய பஞ்சாட்சரம் பிள்ளை, அடைக்கனம்பலம் இவர்களையெல்லாம் கூப்பிட்டு, "பய பேசினதைக் கேட்டிங்களோன்ன, இந்தக் காலத்துப் பசங்களே இப்படித்தான். இவன் சொல்ற மாதிரி பொதுப் பணத்தையெடுத்து கண்டபடி வாரி இறைச்சுட்டா நாளைக்கு தேர், திருவிழான்னா என்ன பண்றது, பொதுப் பணம் எல்லாம் அதுக்குத் தான். கட்டிடம் கட்டப் பணம் வேணும்னா ஊர்ல தலைக்கு இரண்டு ரூபா வரி போட்டு வாங்கக் கூடாதா என்ன" என்று பணம் சேர்க்கும் வழியும் சொல்லி வைத்தார். கிராமப் பொது இடத்தைக் கொடுத்தால், ரிஜிஸ்தர் தகராறு எல்லாம் இருக்கும் என்றும் கூறினார். அதற்குப் பிறகு நடந்த ஊர்ப் பொதுக்கூட்டத்தில் அய்யரின் ஆட்கள் அவர் சொல்லிவைத்தபடி பொதுப்பணத்தை உபயோகிக்கக் கூடாது என்று கூறித் தடுத்தனர். மேலும் வரவிருக்கும் திருவிழாவுக்குச் செலவிற்குத் தேவை என்றும் கூறினர். தேர் திருவிழாவைக் காட்டிலும், மக்களுக்கு நோய், நொடி வராமல் தடுப்பது அவசியம் என்று எவ்வளவோ எடுத்துக் கூறியும் பார்த்திபனுக்குக் கிடைத்தவை 'நாத்தீகன்', 'சிறுவன்' 'ஏதோ உளறுகிறான்' என்ற பட்டங்கள்தான். முனிசீப் முனீஸ்வரய்யரின் திட்டப்படி தலைக்கு இரண்டு ரூபா வசூல் செய்து பணம் திரட்டுவது என்று முடிவு செய்யப் பட்டது. இடம் இனாமாகக் கொடுத்ததாக அனந்தாச்சாரி ஆசுபத்திரி திறப்புவிழாக் கூட்டத்தில் சொன்னார். ஆனால் பார்த்திபனோ, "பார், பொன்னம்பலம், சமூக நலத் திட்டத்தை. அனந்தாச்சாரியாரின் உதவியால் கால் காசு பெறாத காணி நிலத்தை இரண்டாயிரம் ரூபாய்க்கு விற்றுவிட்டார் முன்சீப் முனீஸ்வரய்யர்" என்று கூறிக் கொண்டிருந்தான்.





(39)

(1-9-55 இதழ்த் தொடர்ச்சி)

மகாலோகம்

தேவலோகத்துக்கு 200 கோடி மைல்களுக்கு மேல் மகாலோகம் ஆரம்பமாகிறது.

மகாலோகத்தில், மார்க்கண்டேயர் போன்று சிரஞ்சீவித் தன்மைபெற்ற மாமுனிவர்கள் இருப்பார்கள்.

மார்க்கண்டேயருடைய கதை பலருக்குத் தெரிந்ததாகும். அவர் மிருகண்டு என்ற முனிவருடைய குமாரராகும். மிடுகண்டுவைப் பற்றிப் பார்க்கும்பொழுது, அவர் தாதா என்ற முனிவரின் குமாரனென்று ஒரு புராணத்திலும், கௌசிகர் புதல்வனென்று மற்றொரு புராணத்திலும் கூறப்படுகிறது. எப்படியிருந்தாலும், மிருகண்டு ஒரு முனிவருடைய மகனாகப் பிறந்து வளர்ந்தார். உரிய வயதில் வேதாப்பியாசம் செய்யப்பட்டு, முற்கலருஷி என்பவரிடம் பாடங்கேட்கச் சென்றார். மற்றெல்லோரையும்விட மிருகண்டு மிகக் கெட்டிக்காரனாகவும், குருவுக்கு விருப்பமான சீடனாகவும் ஆனான். மற்ற சீடர்களைப்போல, காட்டில் சுற்றிப் பொழுதுபோக்காமல், பர்ணசாலையில் தங்கிப் பணிவிடை செய்வதில் மிருகண்டு உற்சாகமாயிருந்தான். குரு முற்கலருஷியும் சீடனின் சீலத்தைக்கண்டு வியந்தார், ஆனால் சீடன் பர்ணசாலையில் அடைந்து கிடந்ததற்குக் காரணம் குருபக்தி மட்டுமல்ல, குருவின் குமரியாக இருந்த கோமளவல்லி ஒருத்தியின்பால் மிருகண்டு காட்டிய "பக்தியும்" முக்கியமானதாகும். அவளின் பெயர் மருத்துவதி. அவர்களிடையேயிருந்த நேசம் வளர்ந்தது. கடைசியில் முற்கலருஷிக்குத் தெரிந்ததும், அலறித் துடிக்காமல், நடந்தது நடந்துவிட்டதென்று, மிருகண்டுவுக்கு மருத்துவதியைக் கன்னிகாதானமாகக் கொடுத்தார்.

மருத்துவதியை அழைத்துக்கொண்டு, தனிப்பர்ணசாலை அமைத்து, மிருகண்டு தனது யாகங்களைப் புரிந்துவந்தார். ஆண்டுகள் பலவாகியும், மருத்துவதிக்குப் புத்திரப் பேறு உண்டாகவில்லை. அந்தக்குறையால், மிருகண்டு முனிவரும் மிகவும் வருத்தமடைந்தார். புத்திரப்பேறு வேண்டி, மிருகண்டு காசிக்குப் போய் அங்கு தவக்கோலத்தில் அமர்ந்து, சிவபெருமானை நோக்கிக் கடுந்தவம் புரிந்தார். கடைசியாக சிவபெருமான் இடபவாகனரூபராய், பார்வதிசமேதராய் தவசியின் முன்தோன்றி, ஆசிர்வதித்தார்.

"அருந்தவம் புரியும் முனியே! உனக்கு என்ன வரம் வேண்டும்?" என்று கைலைநாதன் கேட்டார்.

"புத் என்ற நரகத்திலிருந்து என்ற நரகத்திலிருந்து என்னை மீட்க, ஒரு புத்திரனின்றி நான் வாடுகிறேன். எங்களுக்குப் புத்திரப் பேறு தருமாறு கேட்டுக்கொள்ளுகிறேன்!" என்று மிருகண்டு வேண்டினார்.

"ஒரு புத்திரனை உனக்குத் தருகிறோம்' ஆனால் எப்படிப்பட்ட புத்திரன் எனக்கு வேண்டும்? நற்குண நற்செயல்களையுடைய புத்திரன் வேண்டுமென்றால், அவன் அற்பாயுள் உடையவனாக இருப்பான்; பதினாறுவது ஆண்டு முடிந்ததும் இறந்துவிடுவான. தீர்க்காயுள் உடையவனாக ஒரு புதல்வனைத் தரமுடியும். ஆனால் அவன் அறிவற்றவனாய் துன்மார்க்கனாக இருப்பான். இருவகையில் எது வேண்டும்?" என்று சிவபெருமான் கேட்டார்.

"ஆயுள் குறைவாயிருந்தாலும், நற்குண

நற்செயல்களையுடைய புதல்வனே எனக்கு வேண்டும்" என்று மிருகண்டு வரங்கேட்டார். சிவபெருமானும் அவ்வாறே அளித்தார்.

மிருகவதிக்கு மகன் பிறந்தான்; மார்க்கண்டேயன் என வளர்க்கப்பட்டான்,

தான் பதினாறுவது வயதில் இறந்துவிடுவோமென்பதைத் தந்தையிடமிருந்து தெரிந்துகொண்ட மார்க்கண்டேயன் சிவபூசையில் தனது காலத்தைச் செலவழித்துவந்தான். கடைசியாக அவனுடைய பதினாறுவது வயது முடியுந் தருவாயில், மார்க்கண்டேயன் சிவபூசையில் ஈடுபட்டிருக்க, அதனைக்கண்டு அவனைப் பிடிக்கவந்த யமதூதர்கள் திரும்பிப்போக, முடிவில் யமதர்மனே நேரில்வந்து பாசக்கயிற்றை வீச, மார்க்கண்டேயன் இலிங்கத்தை அணைத்துக்கொள்ள, பாசக்கயிறு இலிங்கத்தையும் வளைத்து விழுந்தது. உடனே சிவலிங்கம் வெடித்து, உக்கிரமூர்த்தியாய் சிவபெருமான் வெளிவந்து உதைத்துத் தள்ள, யமன் கீழே விழுந்து மடிந்தனன். பதினாறு வயது முடிந்தால்தானே மார்க்கண்டேயனுக்கு ஆயுள் முடியுமென்று, "என்றும் நீ பதினாறாக இருக்கக்கடவாய்!" என்று வரந் தந்து சிவபெருமான் மறைந்தார்.

யமன் இறந்ததால், பூமியில் இறந்துபோகும் தன்மை மறைந்தது. அதனால் பூபாரம் அதிகமாக, பூமிதேவி தாங்கமுடியாமல் சிவபெருமானிடம் முறையிட்டுக்கொண்டாள். சிவபெருமான் யமனை மீண்டும் எழுப்ப, உலகபாரம் குறைந்தது.

சிவபெருமான் வரந்தந்ததிலிருந்து, மார்க்கண்டேயன் சிரஞ்சீவித்தன்மையுடன் மகாலோகத்தில் இடம்பெற்றான்.

புராணங்களில் வரும் கதைகளில் ஒரு வேடிக்கை என்னவென்றால் ஒரேவிதமான கதை இரண்டுமூன்று புராணங்களில் வெவ்வேறு பெயர்களில் வரும். பெயர் ஒன்றைத் தவிர, மற்றெல்லாம் அதே சம்பவங்களால் கதை எழுதப்பட்டிருக்கும். சிவபூசை செய்து ஆயுள் முடியும் நேரத்தில் இலிங்கத்தை அணைத்துக்கொண்டு, சிரஞ்சீவித்தன்மை பெற்றது மார்க்கண்டேயன் என்பது பெரும்பாலோருக்கு—புராணக்காரர்களுக்குத் தெரிந்தது. ஆனால் இதே கதை இலிங்க புராணத்தில் அப்படியே "காப்பி"யடிக்கப்பட்டிருக்கிறது, மார்க்கண்டேயன் என்ற பெயரை மாற்றி, சுவேதன் என்று பெயர் தரப்பட்டு.

சுவேதன் என்பவனும் அற்பாயுள் உடையவனாகப் பிறந்தானாம். யமனிடமிருந்து தப்பவெண்ணி, சிவபூசையில் ஈடுபட்டிருந்தான். ஆயுள் முடியும்பொழுது, சுவேதன உயிரை வாங்க யமன் பாசக்கயிறை வீச, சுவேதன் தான் பூசித்த இலிங்கத்தை வளைத்துக்கொண்டான். யமன் வீசிய பாசக்கயிறு இலிங்கத்தையும் சுற்றிக்கொண்டது. சிவபெருமான் கோபமடைந்தவராய், இலிங்கத்திலிருந்து வெளிப்பட்டு, யமனை உதைத்துத்தள்ளி சுவேதனனுக்கு முழு ஆயுள் அளித்தார்.

இந்தக் கதை மார்க்கண்டேயனின் கதையை முழுவதும் ஒத்திருத்தல் காணலாம். புராணங்கள் எழுதப்புகுந்தவர்களும், ஒரு புராணத்தில் ஏதாவது நல்ல அமைப்பாக இருக்கும் ஒன்றை—நல்ல கதை என்று அவர்கள் நினைப்பதை, பெயரை மட்டும் மாற்றி அப்படியே மற்றொரு புராணத்தில் வைத்துக்கொண்டனர். புராணக்காரர்களுக்கு ஏற்பட்ட கற்பனைப் பஞ்சம், ஒரு புராணத்திலிருக்கும் கதையை மற்றொரு புராணத்திற்கு மாறு பெயரிட்டு அழைத்துச்செல்லும் வேலையைத் தூண்டியிருக்கிறது.

பிதுர்லோகம்

மகாலோகத்துக்கு 800 கோடி மைல் உயரத்தில் பிதுர்லோகம் இருக்கிறது, புராணங்களின்படி. இதுவே ஜனலோகம் என்றும் கூறப்படுகிறது. இந்த லோகத்தில் பிதுர்க்கள் இருக்கிறார்களாம்.

அண்டசராசரங்களையும் சிருஷ்டிசெய்யும் தொழிலில் பிரமதேவன் ஈடுபட்டபொழுது, முதலில் ஏழு பிதுர்க்களை உண்டாக்கினாராம். இவர்களில் நால்வர் தேகத்துடனும், மூவர் தேகமில்லாமல் ஒளிமயமாக மட்டும் இருந்தார்கள். இவர்களுடைய முக்கியமான வேலை, பிரமதேவனுக்குப் பூசை நடத்துவது, சிருட்டி காரியத்திலும், நான்குவகை வருணத்தில் மக்களை உண்டாக்குவதிலும் பிரமதேவனுக்கு உதவியாக இருப்பது.

நீண்டகாலம் இந்த ஏழு பிதுர்க்களும் தனிமையாக இருந்தனர். பூலோகத்தில் பிதுர்க்களுக்காகச் செய்யப்படும் தர்ப்பணங்கள் பிதுர்லோகமடைந்து, பிதுர்க்களிடம் போய்ச் சேரும். பிரமன் கட்டளைப்படி பிதுர்க்கள் அந்த தர்ப்பணங்களை ஏற்றுவந்தனர். ஆனால் தனிமையாக இருந்த பிதுர்க்கள் வர, வர வலிவிழந்து, சிரார்த்தங்களை ஏற்றுக்கொள்ளும் ஆற்றலற்றவர்களாய், தங்களுக்குத் தரப்பட்ட வேலைகளைச் சரிவரச் செய்ய முடியாமல் இருந்தனர். பிதுர்தேவர்களின்

களைப்பை உணர்ந்த பிரமதேவன், அவர்களுடைய பலவீனத்துக்குக் காரணம் என்னவென்று யோசிக்க, மனைவியில்லாமல் இருப்பதுதான் என்று அவருக்குப் பட்டது. பிரமன் சிருட்டி கர்த்தாதானே! பிதுர்க்களுக்கு திருமணம் செய்துவிடவேண்டுமென்று நினைத்ததும், தனது மனதிலே ஒரு பெண்ணை உருவகம் செய்தார். பின் ஒரு அழகிய பெண் அவர் எதிரே நின்றாள்.

பிரமதேவன் பிதுர்தேவர்களை அழைத்தார் "வாரும்! பிரமவேதிகளே! பிரமசாரியத்தை அனுட்டித்துவரும் நீங்கள், உங்களுடைய காரியங்களைச் செவ்வனே செய்ய முடியாதிருக்கிறீர்களல்லவா?"

பிதுர்க்கள் வணங்கி நின்றார்கள். "பிரபு! பிரபஞ்சத்தை உண்டாக்கவல்ல பிரமதேவரே! எங்கள் பிதாவே! எங்களுக்குச் செலுத்தப்படும் சிரார்த்தகால தர்ப்பணத்தையும், ஸ்நானகால தர்ப்பணத்தையும், அடையமுடியாமல் நாங்கள் அல்லற்படுகிறோம்! அந்த தர்ப்பணங்கள்தாம் எங்களுக்கு ஆகாரமன்றோ? தேவரீர் அருள்புரிந்து, எங்களுக்கு வலிமை தரவேண்டும்."

"அதையெல்லாம் மனதில் வைத்துதான், இந்தப் பெண்ணை நாம் சிருட்டித்தோம். சுவதா என்னும் பெயரினையுடைய இந்த அழகியைப் பாருங்கள்!" என்று பிரமதேவன், தான் மானசீகமாகச் சிருட்டித்தப் பெண்ணை அவர்கள் முன் நிறுத்தினார்.

அழகான பெண்! பிதுர்தேவர்கள் ஆச்சரியத்துடனும், ஆவலுடனும் அவளைப் பார்த்தபடி நின்றார்கள்.

"இந்தப் பெண்ணை உங்கள் ஏழுபேர்களின் பத்தினியாகுமாறு அளிக்கிறேன்; அழைத்துப்போங்கள்!" என்று பிரமதேவன் சுவதா தேவியை கன்னிகாதானம் செய்தார். அதன்படி சுவதாதேவி ஏழுபேருடைய மனைவியாக —நான்கு சரீரமுள்ள பிதுர்க்கள், மூன்று ஒளிமயமான, சரீரமில்லாத பிதுர்க்கள் ஆகிய ஏழுபேர்களுக்கும் மனைவியாக ஆனாள். ஏழுபேருக்கும் பொதுவில் ஒரு பத்தினி கிடைத்ததும், பிதுர்தேவர்கள் தங்களுடைய வேலைகளைக் குறைவின்றி செய்தார்களாம்.

சிருட்டிகாலத்தில் பிரமதேவன் சில தேவர்களை சிருட்டித்துத் தம்மைப் பூசிக்கக் கட்டளையிட்டாராம்! எதற்காக அந்த வேலையைப் பிரமன் உண்டாக்கினார் என்று யாருக்கும் தெரியவில்லை. அண்டசராசரங்களை உண்டாக்கும் பெரிய வேலையில் ஒருவர் ஈடுபட்டிருக்கும்பொழுது, பக்கத்தில் நின்று சதா துதிபாட சிலர் நியமிக்கப்படுவது வேடிக்கையான உத்தரவுதான்! ஆனால் சிருட்டிகர்த்தா பிரமதேவன் அவ்வாறு செய்தார். அவர் கட்டளைப்படி சில தேவர்கள் அவரை இடைவிடாமல் பூசித்துவந்தனர். சிறிது காலத்துக்குள், அந்தத் தேவர்கள், பிரமனைப் பூசிப்பது மறந்து, தமக்கு மிஞ்சி யாருமில்லை என்ற அகங்காரத்துடன் சுற்றினார்கள். அவர்களது போக்கைக் கண்ட பிரமதேவன் "என்னை மதிக்காமல் நடக்கின்றமையால், ஞானசூன்யர்களாகக்கடவீர்!" என்று பலமான சாபம் தந்தார். சாபத்தைக் கேட்டதும், அந்தத் தேவர்கள் தங்கள் தவறை உணர்ந்து, பிரமனிடம் சாபவிமோசனம் தருமாறு வேண்டிக்கொண்டனர். பிரமதேவன் "என் புத்திரர்களைக் கேட்டுப் பெறுக!" என்று கூறினார். சாபம் பெற்ற தேவர்கள் பிரமபுத்திரர்களை வேண்டிக்கொள்ள, பிரமபுத்திரர்கள் அவர்கள்பால் இரக்கங்கொண்டு, "புத்திரர்களே! உங்கள் சாபந் தீர்ந்துவிட்டது! முன்போல நீங்கள் ஆகிவிடுவீர்கள்!" என்று விமோசனம் தந்தார்கள்.

அந்தத் தேவர்களைப் பார்த்து, "புத்திரர்களே!"! என்று பிரமபுத்திரர்கள் அழைத்தமையால், பிரமபுத்திரர்களுக்குப் பிதுர்க்கள் என்ற பெயர் வந்தது.

ஏழுவகையான பிதுர்தேவர்களும் நான்கு சாதியாகப் பிரிக்கப்பட்டிருக்கின்றனர். பிராமணர்களுக்கு இரண்டு பிதுர்தேவர்கள், க்ஷத்திரியர்களுக்கு இரண்டு பிதுர் தேவர்கள், வைசியருக்கு இரண்டு பிதுர்க்கள், சூத்திருக்கு ஒரு பிதுர் தேவர்! அந்தந்த வருணத்தவர்கள் சிரார்த்தம் செய்யும்பொழுது, தங்களுடைய பிதுர் தேவர்களை நினைத்துத் தர்ப்பணம் செய்வார்கள். பூலோகத்தில் தரப்படும் உணவும் நீரும்தான் பிதுர்க்களுக்குப்போய் சேருகின்றன. அதிலும் பிராமணர்கள் நீராடி முடிக்கும்பொழுது, தலைமயிரைத் தட்டிவிட, உச்சித் தலைமயிரிலிருந்து கீழே விழுகிற தண்ணீர் பிதுர்தேவர்களுக்கு அருந்தும் நீராகப் போய்ச் சேருகிறதாம், அதனால்தான் பிராமணர்கள் உச்சித் தலையில் சிறு அளவுக்காவது நீண்ட அளவு மயிரை வளர்த்துக் கொள்ள வேண்டியிருக்கிறது, முழுவதும் வெட்டிவிட்டால், குளித்து முடித்துத் தட்டிவிட முடியாதல்லவா? தலைமயிரைத் தட்டிவிடாவிட்டால், பிதுர்க்களின் தாகம் அடங்கத் தண்ணீர் போகாதல்லவா?

வினாவும் விளக்கமும்

வினா : திராவிடம்! தனி நாடாக உருவாகவேண்டும் என்ற கொள்கையைப் பரப்பிவரும் திராவிட முன்னேற்றக் கழகம், 'தட்சிணப்பிரதேச' அமைப்புக்கொள்கையை ஏன் எதிர்க்கவேண்டும் ?

விளக்கம் : 'திராவிடம்' என்பதும், 'தட்சிணப் பிரதேசம்' என்பதும் திராவிடக் குழு மொழிகள் அடங்கிய பகுதிகள்தாம் என்றாலும், 'திராவிடக் கூட்டாட்சி'க் கோரிக்கைக்கும், 'தட்சிணப் பிரதேச'க் கோரிக்கைக்கும் உள்ள முக்கிய வேறுபாடுகள் பலவாகும் என்பதை உணரவேண்டும்.

திராவிடம் இந்தியாவினின்றும் விடுபட்ட ஒரு தனி நாடாக விளங்க வேண்டும் என்பது தி.மு. கழகத்தின் கோரிக்கையாகும். ஆனால் தட்சிணப்பிரதேசம் இந்தியாவினுள்ளேயே ஒரு தனி மாநிலமாக விளங்கவேண்டும் என்பது மறுதரப்பினரின் கோரிக்கையாகும்.

தமிழகம்—ஆந்திரம்—கருநாடகம் (துளுவமும் சேர்த்து)—கேரளம் ஆகிய பகுதிகள் மொழிவழி இன்றியமையாத் துறைகளைப் பொறுத்து பெருத்த உரிமைகளோடுத் தனித்தனி மாநிலங்களாகப் பிரிந்து, இனவழித் தேவையான குறைந்த அளவுத் திட்டங்களின் அடிப்படையில் ஒன்றுபட்டுத், திராவிடக் கூட்டாட்சியாக விளங்கவேண்டும் என்பது கழகத்தின் எண்ணம். ஆனால் இப்பொழுதுள்ள சென்னை-திருவாங்கூர்-கொச்சி-மைசூர்-குடகு ஆகிய மாநிலங்கள் ஒரே மாநில

இதையெல்லாம் உத்தேசித்துதான், உச்சிக் குடுமி வைக்கவேண்டுமென்ற ஆசாரம் ஏற்பட்டது. உச்சிக்குடுமி வைத்திருப்பவர்களில் மிகப் பலருக்கு இது தெரியாமலிருக்கலாம். ஏதோ ஆசாரம் என்று கருதி அவர்கள் வைத்திருப்பார்கள். வேடிக்கையான சம்பிரதாயம்! பூலோகத்தில் ஆற்றங்கரையிலோ, குளத்தங்கரையிலோ, ஒருவர் உச்சிக்குடுமியைத் தட்டிவிட, அதிலிருந்து விழுகிற தண்ணீர், கோடி கோடி மைல்களுக்கு அப்பால் இருக்கிற பிதுர் லோகத்திற்குப் போய், அதுவும் தட்டிவிட்டவருக்குப் பிதுர்தேவராக உள்ளவருக்குப் போய்ச் சேருகிற தென்றால் விந்தையானதே! அதில் மற்றொரு விந்தையானது என்னவென்றால், பிதுர்க்களுக்குத் தாகமென்றால், அவர்களுடைய வம்சத்தால் கையால் அள்ளிக் கொடுத்தால் அந்தத் தண்ணீர் போய்ச் சேராதா அல்லது அந்தத் தண்ணீரில் இல்லாத மணம், சுவை தலைமயிரைத் கழுவி வருகிற தண்ணீரில் இருக்குமா? ஏதோ விசித்திரமான பிதுர்க்கள் மயிரை நனைத்து வருகிற தண்ணீரில் உருசி கண்டவர்கள்!

பிராமணப் பிதுர்க்கள் சோமபாள் என்று அழைக்கப்படுபவர்; க்ஷத்திரியப் பிதுர்க்கள் ஹவிர்புக்கு என்றும், வைசியப் பிதுர்க்கள் ஆஜ்யபர் என்றும், சூத்திரர் பிதுர்க்கள் சுகாலிகள் என்றும் பெயர் வைக்கம்பட்டுள்ளனர். பூலோகத்தில்தான் சாதிப பிரிவுகள் என்றால், அது பிதுர்லோகம் வரையில் பரவியிருக்கிறது.

பிதுர்க்களைப் பிரீதி செய்யும் வகையில் சிரார்த்தம் செய்யவேண்டுமென்பது வேத வாக்கு, ஸ்மிருதிகளின் கட்டளை! அதிலும், புண்ணிய தலங்களில், புண்ணிய நதிக்கரையில் (வேதங்களின்படி கங்கைதான் மிகவும் புண்ணியமான நதி) சிரார்த்தம் செய்யின் அதில் புண்ணியமாம்! அதைவிட, புண்ணிய தலத்தையும் தேர்ந்தெடுத்து, புண்ணிய நாளில்—அமாவாசை, சங்கிரமணம், மகாலய பட்சம், வியதிபாதயோகம், யுகாதி, மகசப் பிரவேசம், கிரகண புண்ணியகாலம்" இவைகளைத் தேர்ந்தெடுத்து, சிரார்த்தம் செய்யின், பலகோடி பாவங்களும் தீர்ந்து, பிதுர்க்கள் உயர்வடைவார்கள். சிரார்த்த மென்றால், வேறொன்றுமில்லை; நல்ல பிராமணனை அழைத்து, ஆடை அணிகள், உணவு தானியங்கள், காய்கறிகள், கோதானம், பூதானம், முதலியவைகளைத் தருவதுதான்! பிதுர் தேவர்களைத் திருப்தி செய்வதென்றால், பூதேவர்களைத் திருப்தி செய்தால் போதாதா!

(தொடரும்)

மாக மாறி இப்பொழுதுள்ள மாநில அரசு உரிமைகளை மட்டுமே பெற்று இந்திய யூனியன் ஆட்சியின் கீழே அடங்கி யிருக்கவேண்டும் என்பது மறுதரப்பினரின் எண்ணமாகும்.

திராவிடக் கூட்டாட்சிக் கோரிக்கை, திராவிடக் குழுமொழிகளான தமிழ்-தெலுங்கு-கன்னடம் (துளு)-மலையாளம் ஆகிய மொழியினங்கள் தனித்தனியாக வளர்வதற்கும் ஒன்றியிருந்து உரிமைகளைப் பெறுவதற்கும் வழி கோலுவதாகும். ஆனால் தட்சிணப்பிரதேசக் கோரிக்கை, திராவிடக் குழு மொழிகளின் வளர்ச்சியைத் தடுப்பதற்கும், இந்தி மொழி ஆதிக்கத்தை நிலைநாட்டுவதற்கும், தென்னாட்டை வடநாட்டின் நிலையான அடிமை நாடாக ஆக்குவதற்கும் வழிகோலுவதாகும்.

மேற்கண்டவாறு, திராவிடக் கூட்டாட்சிக் கோரிக்கைக்கு நேர்முரணான நிலைமைகளைத் தட்சிணப்பிரதேசக் கோரிக்கை உண்டாக்குவதால்தான், அதனை ஏற்றுக்கொள்ள தி.மு. கழகம் மறுக்கிறது.

தட்சிணப் பிரதேசக் கோரிக்கையை வலியுறுத்தும் நண்பர்கள் திராவிடக் குழுமொழிப் பகுதிகளிடையே நிலவக்கூடிய இன ஒற்றுமை—பண்பாடு ஒற்றுமை—பழக்க வழக்க ஒற்றுமை—நிலத் தொடர்பு — ஆற்றுத் தொடர்பு—மலைத் தொடர்பு—வாணிகத் தொடர்பு—பண்டங்கள் கொடுக்கல் வாங்கல் தொடர்பு—உடன்படிக்கைத் தொடர்பு போன்ற பல்வேறு காரணங்களைச் சுட்டிக் காட்டுகிறார்கள். இத்தகைய காரணங்களில் எந்த ஒரு காரணத்தையும் நாம் மறுக்கவில்லை; அவை யனைத்தையும் போற்றி மதித்து வற்புறுத்திக் கூறியே வருகிறோம். இத்தகைய காரணங்களை யெல்லாம் அடிப்படையாகக் கொண்டுதான், தமிழகம்—ஆந்திரம்—கருநாடகம்—கேரளம் ஆகிய நான்கு பகுதிகளும் தனித்தனி நாடுகளாகப் பிரிந்து போவதைவிடத் (பிரிந்துபோவதற்கு வழிகளும் வசதிகளும் உண்டு என்றாலும்) தனித்தனி மாநிலங்களாகப் பிரிந்து ஒரே கூட்டாட்சி அமைப்பின்கீழ் அமைவது நல்லது என்ற கருத்தைத் தி.மு. கழகம் பரப்பி வருகிறது.

தட்சிணப் பிரதேச அமைப்பு, அரசாங்க வேலை வேட்டையாடுவோர்க்கு (குறிப்பாக மலையாளிகளுக்கு) வேண்டுமானால் பயன்படுவதாக இருக்கலாமே ஒழிய பிறர்க்குப் பிறவகைகளில் பயன்படுவதாகாது.

தென்னாட்டில் வளர்ந்து வரும் மொழியுணர்ச்சியை என்றென்றும் அடியோடு அழுத்திவைப்பதற்கும், ஏக இந்தியாக் கொள்கையை வலியுறுத்துவதற்கும், இந்தியை எளிதில் நுழைப்பதற்கும் கையாளப்படும் சூழ்ச்சியே தட்சிணப் பிரதேசக் கோரிக்கை என்றால் அது மிகையாகாது.

தட்சிணப் பிரதேசம் ஏற்படுமேயானால், தமிழ்—தெலுங்கு—கன்னடம்—துளு — மலையாளம் ஆகிய மொழிகளிடையே சச்சரவு மூளும்; அப்படி மூளும்போது அகில இந்திய அரசியல் மொழியாக ஆக்கப்பட்டிருக்கும் இந்தியையே தட்சிணப் பிரதேசத்தின் ஆட்சி மொழியாகவும் பொதுமொழியாகவும் ஆக்கி விடலாம்; அப்பொழுது இந்தி ஆதிக்கக் கொள்கை நிறைவேறிவிடும் என்பது தட்சிணப் பிரதேசக் கோரிக்கையாளர் சிலரின் உள் நோக்கமாகும்.

தென்னாட்டில் மொழிவழி மாநிலங்கள் பிரியுமேயானால், கேரளத்தில் பொதுவுடைமைக் கட்சியினரும், தமிழகத்தில் திராவிட இயக்கத்தினரும் ஆதிக்கம் பெற்றுவிடக்கூடும் என்று அச்சப்பட்டுக்கொண்டு, தென்னாட்டை என்றென்றும் காங்கிரசுக் கட்சியின்கீழ் வைக்க வேண்டிச் சில காங்கிரசுக்காரர்கள் தட்சிணப் பிரதேசக் கோரிக்கையை வற்புறுத்துகின்றனர்.

சுருங்கமாகக் கூறவேண்டுமானால் தென்னாட்டில் வளர்ந்துவரும் வட்டார மொழியுணர்ச்சியையும், தனிநாட்டு உணர்ச்சியையும் அடியோடு அழிப்பதற்காக ஒரு சிலரால் தீட்டப்பட்டத் திட்டமே தட்சிணப் பிரதேசக் கோரிக்கை எனில் அதில் ஐயமில்லை. எனவேதான் தி. மு. கழகம் அந்தக் கொரிக்கையை ஏற்றுக்கொள்ள மறுக்கிறது.

❖ ❖ ❖

வினா : 'திராவிட முன்னேற்றக் கழகமா'? அல்லது 'திராவிடர் முன்னேற்றக் கழகமா'? எது சரியான பெயர் ஆகும்?

விளக்கம் : திராவிட முன்னேற்றக் கழகம் என்பது தான் சரியான பெயராகும். அப்படித் தன்னை அழைக்கும்படிதான் தி. மு. கழகம் சொல்லி வருகிறது.

'திராவிடர் முன்னேற்றக் கழகம்' என்பது திராவிடர்க்குறிய முன்னேற்றக் கழகம் என்று பொருளபட்டுத், திராவிட மக்களுக்குரிய நலன்களை மட்டுமே கவனிக்கும் கழகம் என்று ஆகிவிடும். ஆனால் 'திராவிட முன்

'னேற்றக் கழகம்' என்பது திராவிட நாட்டுக்குரிய முன்னேற்றக் கழகம் என்று பொருள் பட்டுத், திராவிட மக்களுக்குரிய நலன்களை யெல்லாம் உள்ளடக்கித் திராவிட நாட்டிற்குரிய எல்லா நலன்களையும் பற்றிக் கவனம் செலுத்தும் கழகம் என்று ஆகி நிற்பதாகும்.

இன அடிப்படையில் வளர்ந்த உணர்ச்சி அந்த இனத்திற்குரிய நாட்டின் அடிப்படையில் நாளடைவில் பரந்து வளர்வதாயிற்று. எனவே திராவிட என்ற சொல் இனமக்களின் அடிப்படையில் அமையாமல், அந்த இன மக்களையும் உள்ளடக்கியதான இன்றுள்ள திராவிடநாட்டின் அடிப்படையிலேயே அமைந் திருக்கிறது எனக் கொள்க!

❖ ❖ ❖

வினா : ஆரியப் பார்ப்பனர்களைச் சேர்த்துக்கொள்ளத் திராவிட முன்னேற்றக் கழகம் முன்வந்துவிட்ட தால், இனத்தின் பேரால் உள்ள "திராவிட" என்ற சொல்லை எடுத்துவிட வேண்டாமா?

விளக்கம்: 'திராவிட' என்ற சொல் இனத் தின்பேரால் அல்லாமல், அந்த இனத்தையும் உள்ளடக்கிச் சற்று விரிந்த தன்மையில் அமைந்த நாட்டின் பேரால் அமைந்திருக்கி றது என்பதை முதலில் உணர்ந்து கொள்ளல் வேண்டும்,

ஆரியப் பார்ப்பனர்களை, ஆரியப் பார்ப் பனர்களாகவே திராவிட முன்னேற்றக் கழகம் சேர்த்துக்கொள்ளவில்லை என்பதையும், ஆரி யப் பார்ப்பனீயத் தன்மைகளை அறவே விட்டு, இன்றைய திராவிட நாட்டிற்குரிய பண்பாடு களைத் தழுவித், திராவிட முன்னேற்றக் கழகக் கொள்கைகளை முழுக்க முழுக்க ஏற்றுக் கொள்ளுபவர்களையேதான் தி. மு. கழகம் சேர்த்துக் கொள்கிறது என்பதையும் இரண் டாவதாக உணர்தல் வேண்டும்.

இந்த இரண்டு கருத்துக்களையும் உணர்ந்து கொண்டால் 'திராவிட' என்ற சொல்லை எடுக்கவேண்டிய இன்றியமையாமை இல்லை என்பதை உணரலாம்.

❖ ❖ ❖

வினா : தமிழ்மொழியின் வரலாற்றில் சிறந்த பொற் காலமாகக் கருதப்படும் சங்ககாலத்து வாழ்க்கை யைப் பற்றிய கருத்து என்ன?

விளக்கம்: சங்க காலத் தமிழக வரலாற்றோடு, அக்காலத்திய பிறநாட்டு வரலாறுகளை ஒப் பிட்டுப் பார்க்கும்போது தமிழகம், பல துறை களில் எடுப்பாகவும், ஏற்றமாகவும், சிறப்பாக வும் விளங்கிற்று என்றுதான் சொல்லவேண் டும். அந்தப் பழங்காலச் சிறப்பை நினைந்து நாம் பூரிப்பும் பெருமையும் அடையவே செய் கிறோம்.

அதே வாழ்க்கை முறை அப்படியே இக் காலத்திற்குப் பொருந்தி வருமா என்று பார்த் தால், சில போற்றி வரவேற்கத் தக்கனவாக வும், சில மாற்றிவைக்கத் தக்கனவாகவுமே இருக்கும்.

வினா : சங்ககாலத்து மக்கள் அறிவுத்திருவும், வீரத் திருவும் ஒருங்கேபெற்றுச் சிறப்புற வாழ்ந்ததைத் தாங்கள் ஒப்புக்கொள்கிறீர்களா?

விளக்கம்: ஆம்! ஒப்புக்கொள்கிறோம்! அர சியல்—பொருளியல் — சமூகவியல் — மொழி யியல்—கலையியல் — பண்பாட்டியல் — நாகரிக வியல் ஆகியவற்றில் அக்காலத்திய நிலையில் பிற நாடுகளோடு ஒப்பிட்டுப் பார்க்கும்போது, தமிழகம் மிகச் சிறந்து விளங்கியதோடு அறி விலும் ஆற்றலிலும், வீரத்திலும், புகழிலும் மிக மேம்பாடுற்று விளங்கிற்று என்றுதான் சொல்லவேண்டும்.

வினா : அக்கால மக்களது வாழ்க்கை கடவுட்பற்றிலும் உருவ வழிபாட்டிலும் தோய்ந்திருந்ததை இன்றும் தமிழர்கள் தமதெனப் பாராட்டிப் பெருமைகொள் கின்றனர் அல்லவா?

விளக்கம்: அக்காலத் தமிழக மக்கள் அக் காலத்திய எல்லா நாட்டு மக்களைப் போலவும், காட்டுமிராண்டிக் காலத்திலிருந்து தமிழகத் திற்கு ஏற்ப வளர்ந்துவந்த கடவுளிடத்துப் பற்றுக் கொண்டும், அவற்றை உருவங்க ளாகச் சமைத்து வழிபட்டும் வந்தனர் என்ப தும் உண்மைதான்.

கடவுட் பற்றிலும், உருவ வழிபாட்டிலும் அவர்களில் பெரும்பாலோர் நம்பிக்கை வைத் திருந்தனர் என்றாலும், அல்லும் பகலும் அந வரதமும் அவற்றிலேயே தோய்ந்திருக்க வில்லை என்பதை உணர வேண்டும். "காயமே இது பொய்யடா, வெறும் காற் றடைத்த பையடா" என்று கருதியோ, "வாழ்வாவது மாயம், இது மண்ணாவது திண்

ணம்" என்று எண்ணியோ வாழ்க்கை நலன்களையெல்லாம் வெறுத்தொதுக்கித் தள்ளிவிட்டுப் "பக்தி மார்க்கம்" ஒன்றை மட்டுமே கடைப்பிடித்து அவர்கள் வாழ்ந்துவரவில்லை என்பதையும் உணரவேண்டும்.

கடவுளைப் பற்றியும் உருவ வழிபாட்டைப் பற்றியும் ஒரு சிறிதும் கவலைப்படாமல், இவ்வுலகத்தின் தீங்கற்ற இன்ப வாழ்வைப்பற்றி மட்டுமே கவலைப்பட்டுக்கொண்டிருந்த சான்றோர்களும் சங்க காலத் தமிழகத்தில் வாழ்ந்திருக்கவே செய்திருக்கின்றனர்.

அக்கடவுட் பற்றும், உருவ வழிபாடும் இக்காலத்தில் பாராட்டிப் பெருமை கொள்ளத் தக்கனவா என்றால், அல்ல என்கிறோம். அத்தகைய கடவுட் பற்றும், உருவவழிபாடும் வாழ்க்கைக்கு இன்றியமையாதன அல்ல. மக்கள், அவற்றில் தங்கள் நேரத்தையும், நினைப்பையும், பொருளையும், உழைப்பையும், அறிவையும் ஆற்றலையும் செலவழிக்காமல், பகுத்தறிவின் துணைகொண்டு வாழ்க்கையில் ஏற்படும் தீமைகளை அகற்றவும், நன்மைகளைப் பெருக்கவும் முயலுவார்களேயானால், அதுவே சிறந்த நெறியாகும்.

பண்டைத் தமிழர்கள் கொண்டிருந்தார்கள் என்பதற்காக எல்லாவற்றையும் அப்படியே பின்பற்றுவதும் பாராட்டுவதும் மூடத்தனமாகும். அவர்கள் கொண்டிருந்த கடவுட் பற்றும், உருவ வழிபாடும் இக்கால வாழ்க்கை முறைக்குத் தேவையற்றன; ஒதுக்கித் தள்ளி வைக்க வேண்டியன ஆகும். எனவே அந்தக் கடவுட் பற்றையும், உருவ வழிபாட்டையும் இக்காலத் தமிழர்கள் தமதெனப் பாராட்டிப் பெருமை கொள்ளுவதற்கு ஏதொரு இன்றியமையாமையும் இல்லை. அவற்றைத் தமதெனப் பாராட்டிப் பெருமை கொள்ளும் தமிழர்கள் இருக்கின்றனரே என்றால், அவர்கள் பகுத்தறிவை மறந்து மூடப் பக்தியில் மூழ்கியவர்கள் என்க!

வினா : சங்க இலக்கியங்களும், தொல்காப்பியம் போன்ற இலக்கணங்களும் கடவுட்பற்றுக்கும், உருவ வழிபாட்டிற்கும் சான்று பகருகின்றனவே அங்ஙனமிருக்க அதற்கு மாறுபடப் பேசுவது ஏன்?

விளக்கம் : சங்க இலக்கியங்களும், தொல்காப்பியம் போன்ற இலக்கணங்களும் கடவுட் பற்றைப் பற்றியும், உருவ வழிபாட்டைப் பற்றியும் குறிப்பிடுகின்றன என்பதை நாம் மறுக்கவில்லை.

சங்க இலக்கியத்திலும், தொல்காப்பியத்திலும் கூறப்பட்டிருக்கின்றன என்ற ஒரே காரணத்துக்காக அப்படியே எல்லாவற்றையும் இக்காலத்தில் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்ற இன்றியமையாமை இல்லை. இக்காலத்தின் அறிவு ஆராய்ச்சிக்குப் பொருந்தி வரக்கூடியவைகளைப் போற்றி ஏற்றுக்கொள்கிறோம்; பொருந்தி வராதவற்றை ஒதுக்கிவைக்கிறோம். அப்படி ஒதுக்கி வைக்கப்பட வேண்டியவைகளாக இருப்பவைதாம் சங்க காலக் கடவுட் பற்றும், உருவ வழிபாடும் ஆகும் என்பதை உணரவேண்டும்.

கடவுட் பற்றுக்கும், உருவ வழிபாட்டிற்கும் மாறுபட நாம் பேசுவதற்குக் காரணம், காலத்திற்கும் பகுத்தறிவு ஆராய்ச்சிக்கும் அவை பொருந்தி வராதனவாக இருப்பதாலும், அவற்றால் ஏதொரு பலனும் ஏற்படாமல் இருப்பதாலும் ஆகும்.

❖ ❖ ❖

வினா : இந்தியாவிலுள்ள மக்கள் தமக்கு என்று ஒரு தேசிய மொழியைக் கொள்ளவேண்டாமா? அந்த வகையில் இந்தியை ஏற்றுக்கொள்வது எவ்வாறு தவறுடையதாகும்? என்ன இருந்தாலும் ஆங்கிலம் ஒரு அன்னிய மொழிதானே?

விளக்கம் : இந்தியாவிலுள்ள மக்களைப் பொதுவாகப் பதினான்கு தேசிய இனங்களாக இக்காலத்தவர் பிரித்துள்ளார்கள். பதினான்கு தேசிய இனங்களும் தத்தமக்கென்று ஒவ்வொரு தேசிய மொழியை அதாவது தாய்மொழியைக் கொண்டிருக்கின்றன.

ஒவ்வொரு தேசிய இனமும் தமக்கென்று ஒரு தாய்மொழியைக் கொண்டிருக்கும்போது, அந்த இனத்தின் 'தேசிய மொழி' இடத்தை நிரப்புவதற்கு வேறுமொழி எதுவும் அவசியமில்லையே! இந்தி வேண்டுமானால் அதனைத் தாய்மொழியாகக் கொண்டுள்ள மக்களினத்திற்குத் தேசியமொழியாக விளங்கலாமே ஒழிய, பிற மக்களினங்களுக்கு அது தேசிய மொழியாகாதே!

எடுத்துக்காட்டாகத் தமிழக மக்கள் தாயன்பு செலுத்த—பாராட்ட—மதிக்க—போற்ற — வளர்க்க — தமதெனக்கொள்ள — புகழ—பெருமைபடத் தாய்மொழியாம் தமிழ் இருக்கவே இருக்கிறது. அந்த 'தேசிய மொழி' இடத்தை நிரப்ப வேறு எந்த

அறிவுப்புதிர் - 1 : விளக்கம்

[சென்ற இதழில் வெளியான அறிவுப்புதிர்களுக்குரிய விளக்கங்கள்]

புதிர்—1 : நீங்கள் மூச்சுவாங்கும் காற்றில் நூற்றுக்கு 79 பங்கு நைட்ரோசன் (Nitrogen) என்ற உப்புவளியும், 20 பங்கு பிராணவாயும், ·04 பங்கு கரியமிலவாயும் அடங்கியிருக்கின்றது. 20 பங்குள்ள உயிர்வளியில் சுமார் 4 பங்கை மட்டும் நுரையீரல் (Lungs) எடுத்துக் கொண்டு, அதற்குப் பதிலாக அதேயளவு கரியமிலவாயுவை வெளிவிடுகின்றது. உப்புவளியின் அளவில் எவ்வித மாறுதலும் ஏற்படுவதில்லை. மூச்சுவிடும் காற்றில் உப்பு வளி 79 பங்கும், பிராணவாயு சுமார் 16 பங்கும், கரியமிலவாயு சுமார் 4 பங்கும் அடங்கியிருக்கும். ஆகவே மூச்சுவிடும் காற்றிலும் கரியமிலவாயுவைவிடப் பிராணவாயுதான் அதிகம் அடங்கியுள்ளது.

புதிர்—2 : புகையிலையில் ஒரு நச்சு அடங்கியுள்ளது. அதற்கு நிகோடைன் (Nicotine) என்று பெயர். இந்த நச்சு நமது உடலினுள் புகுமானல், நரம்புத்தளர்ச்சியை ஏற்படுத்துவதோடு, இரத்தக் குழாய்களையும் சுருக்குகின்றது. இதனல் இரத்த ஓட்டமும் கட்டுப்படுத்தப்பட்டு மேலும் மேலும் இரத்தக் குழாய்கள் சுருக்கமடைகின்றன.

புதிர்—3 : சினிமாவில் அசைவில்லாத படங்கள் பல அதிவேகத்தில் ஒரே கோர்வையாகச் சுற்றப்படுகின்றன. ஒருவிநாடி நேரத்தில் 24 படங்கள் தோன்றி மறைகின்றன. அந்தப் படங்கள் ஒவ்வொன்றிற்கிடையிலேயும் ஒரு மறைவுக்கட்டம் தடுத்து நிற்கும். ஒளிப்பெட்டியின்முன் ஒரு படம் வரும்பொழுது திரையில் படம் தோன்றுகிறது. ஆனல் அடுத்த படம் வருவதற்குமுன் இந்த மறைவுக்கட்டம் ஒளிப்பெட்டியின்முன் வருவதால் திரையில் சரியான படம் தோன்ருது. ஒரு மறைவுக்கட்டம் ஒளிப்பெட்டியின்முன் வந்து மறைய அது எடுத்துக்கொள்ளும் நேரம் விநாடியில் மிகமிகக்குறைவாகும். நாம் காணும் காட்சிகள் நமது கண்களைவிட்டு உடனுக்குடன் மறைந்துவிடாமல் சிறிதுநேரம் தங்கக்கூடியதாக இருக்கின்றது. அந்தச் சிறிதுநேரம் அரைக்கால் விநாடியாகும். இதனல்தான் தீப்பந்தங்களை வேகமாகச் சுழற்றும்போது வட்டமான தீக்கோடுகள் ஏற்படுவதைப் பார்க்கின்ருேம். உருவங்களை 1/8 விநாடி நிறுத்திவைக்கும் திறனைக் கண்கள் பெற்றிருப்பதனல்தான் நாம் சினிமாக் காட்சிகளைக் காணமுடிகிறது. சினிமாத்திரையில் விநாடிக்கு 24 படங்கள் தோன்றி மறைகின்

மொழிக்குத் தகுதி யிருக்கிறது—அவசியம் ஏற்படுகிறது. குறிப்பாகத் தமிழகத்திலோ அல்லது ஆந்திரத்திலோ அல்லது கருநாடகத்திலோ அல்லது கேரளத்திலோ 'தேசிய மொழி' என்று சொல்லிக்கொண்டு அடி எடுத்துவைக்க இந்திமொழிக்குத் தகுதியோ, திறமையோ, உரிமையோ ஒரு சிறிதும் கிடையாதே! எனவே தமிழ்—தெலுங்கு—கன்னடம்—மலையாளம் போன்ற மக்களுக்கு இந்தி இம்மி அளவும் தேசியமொழி ஆகாது என்பதை உணரவேண்டும்.

தமிழக மக்களுக்கு—திராவிட மக்களுக்கு ஆங்கிலம் எந்த அளவுக்கு அந்நியமொழியோ, பிரெஞ்சு—செர்மனி—இத்தாலி எந்த அளவுக்கு அந்நிய மொழிகளோ, அரேபியா—பாரசீகம்—சிங்களம்—பர்மா—மலேயா மொழிகள் எந்த அளவுக்கு அந்நிய மொழிகளோ அதே அளவுக்கு அந்நியமொழிதான் இந்தி என்பதைத் தெளிவாக அறியவேண்டும்.

ஆங்கிலம்—இந்தி ஆகிய இரண்டு அந்நியமொழிகளில், எந்த அந்நிய மொழியைத் துணையாகக் கொள்ளுவது நமக்குச் சாலச் சிறந்த நன்மை பயக்கும் என்று பார்த்தால், ஆங்கிலந்தான் எல்லாவகையிலும் சிறந்ததாகும் என்பதை எவரும் எளிதில் உணரலாகும்.

ஆங்கிலம் அகில இந்தியத் தொடர்பு மட்டுமல்லாமல், அகில உலகத் தொடர்பையும் நமக்கு எளிதில் ஏற்படுத்தவல்லதாகும். ஆனல் இந்தியோவெனில் எவ்வளவுதான் முயன்றுபார்த்தாலும் அகில இந்தியத் தொடர்பை மட்டுந்தான் நீண்டகாலத்திற்குப் பிறகு மெல்லமெல்ல ஏற்படுத்தக்கூடியதாகும். எனவே தமிழகத்தின்—திராவிடத்தின் நேரம்—நினைப்பு—உழைப்பு—ஆற்றல்—அறிவு — பொருள் ஆகியவற்றை இந்திக்குச் செலவழித்து வீணாக்குவதைவிட ஆங்கிலத்திற்குச் செலவழித்து மிக்கப் பயன்பெறுவது எவ்வளவோ நல்லதாகும்.

றன. இதற்கிடையில் 23 மறைவுகளும் (மறைவுக்கட்டங்களால் ஏற்படுவது) தோன்றுகின்றன, ஒரு படமும் ஒரு மறைவுக்கட்டமும் ஒளிப்பெட்டியின்முன் நகர விநாடியில் 24-ல் 1 பங்கு நேரமாகிறது. ஒரு படம் நமது பார்வையில் தோன்றி மறையும் நேரத்திற்குள் (1/8 விநாடிக்குள்) மூன்று படங்கள்வரை நகர்ந்து, இடைவெளியில்லாமல் மறுபடியும் நாம் தொடர்ந்து பார்த்துக்கொண்டிருக்கும்படியாகப் படங்கள் சுற்றப்படுகின்றன. இதனால் படங்களுக்கு இடையில் உள்ள மறைவுக் கட்டங்களால் ஏற்படும் மறைவுகளை நாம் காண முடிவதில்லை.

புதிர்—4 : உடல் வளர்ச்சிக்குத் தேவைப்படும் வைடமின்களை ஏ, பி, சி, டி என்று பல வகைகளாகப் பிரிக்கலாம். இதில் வைடமின்-டி என்னும் வகையானது நமது உடம்பிலேயே உண்டாகக்கூடியதாகும். ஞாயிற்றின் ஒளிக் கதிர்கள் நேரிடையாக நமது உடலில் படும்பொழுது, தோலின அடுக்குகளில் ஒருவித ரசாயன மாற்றம் ஏற்பட்டு அதனால் வைடமின்-டி உற்பத்தியாகின்றது.

புதிர்—5 : குளிர்ச்சியான நீர், கொதிக்கும் நீர் சாதாரண நிலையிலுள்ள நீர்—இவைகளைக் கொண்ட மூன்று தனித்தனிக் கலங்களை வைத்துக்கொண்டு, வலது கையை கொதிக்கும் நீரிலும், இடதுகையை குளிரும் நீரிலும் வைத்துக்கொண்டு சிறிதுநேரம் இருந்துவிட்டுப் பின் இருகைகளையும் ஒரே நேரத்தில் சாதாரண நீர் நிறைந்த கலத்தில் வைக்கவும். அப்பொழுது அந்தக் கலத்திலுள்ள நீர் வலது கையின் உணர்வால் குளிர்ச்சியாகவும், இடது கையின் உணர்வால் வெப்பமாகவும் இருப்பதாகத் தோன்றும்.

புதிர்—6 : (இந்தப் புதிரில், 'வயிற்றில்' என்பதற்கு 'இரைப்பை' என்று கொள்ளுதல் வேண்டும்).

உணவைச் செரிக்கச் செய்வதில் இரைப்பை முக்கியமான வேலையைச் செய்தாலும் உணவில் பெரும்பகுதி சிறுகுடலில்தான் செரிக்கின்றனது.

புதிர்—7 : நமது கண் நிழற்படப் பெட்டி (Camera) யைப் போல அமைந்திருக்கிறது. நிழற்படப் பெட்டியில் பொருத்தப்பட்டிருக்கும் இணை குவிந்த கண்ணாடி வில்லையினால் பொருள்களின் உருவங்கள் தலைகீழாக மாற்றப்படுகின்றன. நமது கண்களும் உருண்டையாக இணைகுவிந்த கண்ணாடிவில்லைபோல் அமைந்திருப்பதால் பொருள்களின் உருவங்கள் தலைகீழாகத்தான் விழும். நிழற்படப் பெட்டியிலுள்ள நிழற்படத் தகடுகளில் உருவங்கள் தலைகீழாக விழுந்தாலும், அந்த நிழற்படத்தகடுகளைக் கழுவி, படங்களைத் திருப்பிப் பார்த்துக்கொள்ளமுடியும். நமது கண்களில் தலைகீழாக விழும் உருவங்கள் பார்வை நரம்புகளால் மூளைக்கு எடுத்துச் செல்லப்படுகிறது. உருவங்களை நேராக்கித் தெளிவாக்கும் பொறுப்பினை மூளை ஏற்றுக்கொள்கின்றது.

●●

அறிவுப்புதிர் - 2 : விடைகள்

சரியானவை : 1, 2, 5. **தவறானவை : 3, 4, 6, 7.**

இதற்குரிய விளக்கங்களை அடுத்த இதழில் காணலாம்.

தமிழ் நாட்டில் தலை சிறந்த

வெண்சங்கு சீயக்காய்தூள்

எங்கும் கிடைக்கும்

எங்களிடம் தயாராகும் மணத்தில் சிறந்த

செல்வம்—ராணி ஊதுபத்திகளை

வாங்கி உபயோகியுங்கள்

தயாரிப்பாளர் :- வெண்சங்கு சீயக்காய்தூள் தொழிற்சாலை

3037-38, டபீர் குளம் ரோடு, தஞ்சாவூர்.

மலாயாத் தமிழர்களுக்கு ஓர் நற்செய்தி! டெலிபோன் நெ. 22

அவ்வை புத்தக நிலையம்

142, ஜாலான் இட்ரீஸ்-கம்பார். (மலாயா)

எங்களிடம்!

தமிழ்நாட்டின் பிரபல எழுத்தாளர்களின் கருத்தோவியங்களும் அறிவூட்டும் நாவல்களும் துப்பறியும் கதைகளும் சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழக வெளியீடுகளும், (சினிமா) கதை வசனபாட்டு புத்தகங்களும், கலர் படங்களும், தாயகத்திலிருந்து வரும் வார, மாத பத்திரிகைகளும், ஸ்டேசனரி சாமான்களும், காலண்டர் மற்றும் ஆங்கில காமிக்ஸ், மேக்கிசன் & நாவல்களும் மலாய் நாவல்களும் எப்பொழுதும் கிடைக்கும்.

குறிப்பு : வியாபாரிகளுக்கு தக்க கழிவு உண்டு.

வெளியூர் ஆர்டர்களை தாமதமின்றி கவனிக்கப்படும். உடன் தொடர்பு கொள்க.

AVVAI BOOK STALL

142, JALAN IDRIS, KAMPAR. Tel. No. 22. PERAK, MALAYA

Edited, Printed and Published by V. R. NEDUNCHEZHIYAN M.A., at MANRAM ACHAKAM at 26, Nainiappan St, Mannadi, MADRAS-1.